# உள்ளடக்கம்...


- தலையங்கம் 2
- காவிரிச் சிக்கலில்பிரித்தானிய, இந்திய வல்லாதிக்கங்கள் – பாரி 3
- பாசிச எதிர்ப்புமக்கள் முன்னணி அறைகூவல் – பாலன் 8
- அதிகாரப்பிரிவின் கோட்பாடும் ஜனநாயகமும் – வழக்கறிஞர் இரா.வைத்தீஸ்வரன் 11
- ஜனபதங்கள் நெருங்கி வரும் பேரபாயம் – பாரி 13
- சங்கி என்பவர் யார்? – ந.மணிமாமறன் 15
- தக்காளி – சிறுகதை – து.சோ.பிரபாகர் 19
- மார்க்சிய இயங்கியலும் மனிதகுல விடுதலைக்கான ஸ்டாலின் பங்களிப்பும் – மகாராசன் 22
- கறிவேப்பிலைகள்! – திருநம்பி 25
- மன நலமும் முதலாளியமும் – அழகு 28
- ஆட்சியாளர்களை விரட்டி அடிக்கும் சிங்கள மக்களின் வரலாறு காணாத எழுச்சி – செந்தமிழ்க்குமரன் 32






**சாதி ஒழிப்போம்!**
**தமிழரை இணைப்போம்!**
**தமிழ்த்தேச இறையாண்மை மீட்போம்!**


*ஆசிரியர்:*
**திருமொழி**

*சிறப்பாசிரியர்:*
**மெய்.சேதுராமலிங்கம்**

*ஆசிரியர் குழு:*
**முத்து முருகன்**
**நாஞ்சில் நாட்டான்**
**பாரி**
**ந.மணிமாறன்**
**கல்பனா**

*ஆலோசனைக்குழு:*
**மறைமலை**
**அருவி**
**தமிழ்ச்செல்வன்**
**தென்மொழி**

*சட்ட ஆலோசகர்:*
**இரா.வைத்தீஸ்வரன்**
B.A., B.L.,

*இதழ் வடிவமைப்பு:*
**www.wordedge.in**

*மின்னஞ்சல்:*
**mozhivazhi@gmail.com**

*தொடர்பு எண்கள்:*
76674 43935,
99431 14128.


**தலையங்கம்**

# இந்திய தேசியமும் மொழிவழி தேசியங்களும்

தற்பொழுது மொழிவழி மாநிலங்களை இரண்டாக, மூன்றாக நான்காகப் பிரிக்க வேண்டும் என்ற கருத்தை ஆர்.எஸ்.எஸ்.-சும் அதன் துணை அமைப்புகளும் மற்றும் பா.ஜ.க.வும் பேசி வருகின்றன. தமிழ்நாட்டில் நயினார் நாகேந்திரன் பா.ஜ.க. - மாநிலத் துணைத் தலைவர் வி.பி. துரைசாமி எம்.எல்.ஏ. பேசியது அப்படியான விவாதத்தைக் கிளப்பி இருக்கிறது. இக்கருத்தின் தீங்கைத் தமிழ்த் தேசியத்தை முன்னெடுப்பவர்கள், தமிழ் நாட்டின் உரிமையை விரும்புகின்றவர்கள், தேசிய இனங்களின் தன் தீர்வு உரிமைக்காகப் (சுய நிர்ணய உரிமைக்காக) போராடுகின்றவர்கள், மாநில சுயாட்சியைக் கோருகின்றவர்கள் ஓரணியில் நின்று மக்களிடையே விழிப்பை ஏற்படுத்த வேண்டும்.


மொழிவழி தேசிய இனங்களின் உரிமையை ஒழித்துக் கட்டி இந்திய தேசம் என்ற ஒற்றைத் தேசத்தைக் கட்டும் முயற்சியில் இந்திய ஆளும் வர்க்கம், அவர்களுக்குச் சேவை செய்யும் இந்திய தேசிய கட்சிகள், அவர்கள் வெவ்வேறாகச் செயல்பட்டாலும் இந்திய தேசியத்தைக் காப்பதில் ஒன்றுபட்டுள்ளனர்.

இந்திய தேசியத்தைச் கட்டமைக்கும் முயற்சியில் வட நாட்டு பார்ப்பன, பனியா ஆளும் வர்க்கங்கள் தலைமையேற்றுள்ளன. அவை இந்தி, இந்து, இந்தியா என்ற கருத்தை ஏந்தி வருகின்றன. இவை கோட்பாட்டு வழியிலும், நடைமுறையிலும் முறியடிக்கப் பட வேண்டும்.

இலங்கையில் தமிழர் தாயகத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்களாகப் பிரித்து சிங்கள அரசு ஒடுக்கியது. ஜம்மு காஷ்மீரை - காஷ்மீர், லடாக் என இரண்டாகப் பிரித்து ஜம்மு காஷ்மீர் விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசு ஒடுக்கி வருகிறது. முகிழ்த்து வரும் தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கவே தமிழ்நாட்டை இரண்டாக, மூன்றாகப் பிரிப்போம் என பா.ஜ.க.வும் அதன் அடிவருடிகளும் பேசி வருகின்றனர். இதனைத் தமிழக மக்களின் துணையுடன் முறியடிக்க வேண்டும்.

1947க்கு முன் மொழிவழி தேசிய இனங்கள் தங்களது அரசுரிமைக்காகப் போராடிய போது அதனை ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதி அளித்த காங்கிரசு கட்சி, 1947க்குப் பிறகு மொழிவழி தேசிய இனங்களின் போராட்டத்தைப் பிரிவினைவாதம் என முத்திரைக்குத்தி ஒடுக்கியது. இந்தியாவில் மொழி வழி தேசிய இனங்களின் மொழி, பண்பாடு, பொருளாதாரம் ஆகியன ஒடுக்கப்படுகின்றன. காஷ்மீர் இந்தியாவுடன் சேர்ந்திருப்பதா, பாகிஸ்தானுடன் சேர்ந்திருப்பதா என பொது வாக்கெடுப்பு நடத்தி முடிவு செய்து கொள்ளலாம் என ஐ.நா. மன்றத்தில் வாக்குறுதி கொடுத்த இந்தியா அதனைக் காற்றில் பறக்க விட்டது. தற்பொழுது காஷ்மீரை இரண்டாகப் பிரித்துச் சிதைத்துள்ளது. இதனை பா.ஜ.க. இந்தியா முழுமைக்கும் விரிவுப்படுத்த வுள்ளது. எனவே தமிழ்நாட்டை இரண்டாக, மூன்றாகப் பிரிப்பது என்பது தமிழ்நாட்டின் சிக்கல் மட்டுமன்று; இந்தியாவிலுள்ள எல்லா மொழி வழி தேசிய இனங்களின் சிக்கலுமாகும். இதற்கு எதிராக மொழி வழி தேசிய இனங்கள் போராட முன் வர வேண்டும்!

தொடர் - 2



# காவிரிச் சிக்கலில்
# பிரித்தானிய, இந்திய வல்லாதிக்கங்கள்

❑ பாரி

1892, 1924 காவிரி ஒப்பந்தங்கள், 1972 உண்மை அறியும் குழு அறிக்கை மற்றும் 1974இல் எடுக்கப்பட்ட முடிவுகள், காவிரி நடுவர் மன்ற இடைக்கால மற்றும் இறுதி தீர்ப்புகள், அதன் மீதான 2018இல் இந்தியாவின் உச்சநீதிமன்றத் தீர்ப்பு, இந்திய அரசின் செயல்பாடுகள் ஆகியவற்றைத் தொகுத்து ஆராய்ந்தால், காவிரிச் சிக்கலில் தமிழர்களின் உரிமையைப் பாதுகாப்பதில் பிரித்தானிய அரசு ஈடுபட்டிருந்ததையும், தமிழர்களின் உரிமையைப் பறிப்பதில் இந்திய அரசு ஈடுபட்டிருப்பதையும் அறிய முடியும். இது வியப்பளிக்கலாம். ஆனால் உண்மை தமிழர்களைப் பகை இனமாகக் கொண்டு தமிழர்களின் காவிரி உரிமையைப் பறிப்பதில் இந்திய அரசு சட்டத்தின் பெயரால் படிப்படியாக செயல்படுத்தி வருகிறது. அதே நேரத்தில் கர்நாடகாவின் சட்டப்புறம்பான நடவடிக்கைகளை இந்திய அரசு தொடர்ந்து ஆதரித்து அதற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வந்துள்ளது. 1924க்கு முன்னும் பின்னும் தமிழ்நாடும், கர்நாடகமும் பெற்றிருந்த பாசனப் பரப்பை அட்டவணை 1, 2லும் தண்ணீரின் அளவை அட்டவணை 3லும் பார்த்தோமானால் காவிரியில் தமிழர்கள் தங்களது உரிமையை இழந்துள்ளதையும், கன்னடர்கள் தமிழர்களின் உரிமையைத் தட்டிப் பறித்துள்ளதையும் அறிய முடியும்.

**அட்டவணை 1**

| தமிழ்நாட்டின் காவிரிப் பாசனப் பரப்பு | ஏக்கரில் |
|---|---|
| 1924 ஒப்பந்தத்திற்கு முன் | 14,44,000 |
| 1924க்குப் பிறகு புதிதாக விரிவுபடுத்தப்பட்ட பாசனம் | 11,36,000 |
| 1990 வரையிலுமான மொத்தம் | 25,80,000 |

**அட்டவணை - 2**

| கர்நாடகாவின் காவிரிப் பாசனப் பரப்பு | ஏக்கரில் |
|---|---|
| 1924 ஒப்பந்தத்திற்கு முன்பு | 1,11,000 |
| 1924க்குப் பிறகு புதிதாக விரிவுபடுத்தப்பட்ட பாசனம் | 20,27,000 |
| 1990 வரையிலுமான மொத்தம் | 21,38,000 |

அட்டவணை-1 மற்றும் அட்டவணை-2 புள்ளி விவரம் காட்டுவது தமிழ்நாட்டைவிட கர்நாடகம் 8,91,000 ஏக்கர் பாசனப் பரப்பை புதிதாக விரிவுபடுத்தியுள்ளது.

**அட்டவணை - 3**

| ஆண்டு | தமிழ்நாடு பெற்று வந்த நீர் டி.எம்.சி. அளவு | கர்நாடகம் பெற்று வந்த நீர் டி.எம்.சி. அளவு |
|---|---|---|
| 1924க்கு முன் | பயன்படுத்திய நீர் 391.2 | பயன்படுத்திய நீர் 27.2 |
| 1924 இல் | 489 | 177 |
| 1972 இல் | 489 | 177 |
| 1974இல் | 489 | 177 |
| 1990 இடைக்காலத் தீர்ப்பு | 205 | 310 |
| 2007 இறுதித் தீர்ப்பு | 192 | 270 |
| 2018 உச்சநீதிமன்றத் தீர்ப்பு | 177.25 | 284.75 |

பாசனப் பரப்பைக் காட்டும் அட்டவணை 1 மற்றும் 2-ஐ ஒப்பிட்டோமானால் 1924க்கு முன் காவிரியில் தமிழ்நாடு 14,44,000 ஏக்கர் பாசனப் பரப்பைக் கொண்டிருந்தது. கர்நாடகம் வெறும் 1,11,000 ஏக்கர் பாசனப் பரப்பைக் கொண்டிருந்து. 1990ஆம் ஆண்டின் கணக்குப்படி தமிழ்நாடு 11,36,000 ஏக்கர் புதிதாகப் பாசனப் பரப்பை விரிவுபடுத்தி யுள்ளது. கர்நாடகம் 20,27,000 ஏக்கர் பாசனப் பரப்பைப் புதிதாக விரிவுபடுத்தியுள்ளது. தமிழ்நாட்டின் புதிதாகப் பாசனப் பரப்பு விரிவாக்கம் முதல் மற்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாகவும், மேட்டூர் திட்ட விரிவாக்கத்தின் மூலமாகவும் நடைபெற்ற சட்டப்படியான வேலைகளாகும். கர்நாடகாவில் புதிதாக பாசனப் பரப்பு விரிவாக்கம் கபினி, ஏரங்கி, ஏமாவதி, யாகச்சி, சுவர்ணவதி போன்ற சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டப்பட்ட அணைகள் மூலமும் கொண்டு வரப்பட்டதாகும். இதனை இந்திய அரசோ, நீதித்துறையோ கண்டு கொள்ளவில்லை.

தண்ணீர் அளவைக் காட்டும் அட்டவணை 3ஐ ஆராய்வோம். 1924க்கு முன் தமிழ்நாடு 391.2 ஆ.மி.க. தண்ணீரையும், கர்நாடகம் வெறும் 27.2. ஆ.மி.க. தண்ணீரையும் பயன்படுத்தி வந்துள்ளன. 2018இல் தமிழ்நாடு 177.25 ஆ.மி.க. தண்ணீரையும், கர்நாடகாம் 284.75 ஆ.மி.க. தண்ணீரையும் உரிமையாக்கி உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. **கீழ்ப்படுகை நாடுகளுக்கான பங்கு உலகெங்கும் குறைக்கப்பட்டதே இல்லை. ஆனால் சுதந்திர இந்தியாவில் தமிழ்நாட்டின் பங்கு படிப்படியாக சட்டத்தின் பெயரால் குறைக்கப்பட்டுள்ளது.**

### காவிரிக்காகத் தமிழ்நாட்டின் போராட்டம்

காவிரியில் தமிழ்நாட்டின் உரிமையை வெட்டிக் குறைப்பதில் ஈடுபட்ட கர்நாடகாவின் சூழ்ச்சித் திட்டங்களுக்கு இந்திய அரசு தொடர்ந்து ஆதரவளித்து வந்துள்ளது. வெட்டிக் குறைக்கப்பட்ட காவிரி உரிமைக்காக



தமிழ்நாடு தொடர்ந்து போராடி வந்துள்ளது. காவிரி உரிமை மீட்புக் குழுத் தலைவர் பெ. மணியரசன் கூறுவதுபோல, “தமிழ்நாட்டிற்கு எந்த உரிமையும் ஒன்றுக்குப் பத்துத் தடவை காவடி எடுத்துக் காவடி எடுத்துதான் கிடைக் கும். எதுவுமே சட்ட உரிமையின்படி கிடைப்ப தில்லை” (காவிரி நேற்று - இன்று - நாளை, இரண்டாம் பதிப்பு, பக்கம் 40). பத்து தடவை காவடி எடுத்துப் போராடி பெற்ற உரிமையைக் கூட இந்திய அரசு நடைமுறைப்படுத்துவ தில்லை.

காவிரிக்கான தமிழர்களது போராட்டம் காவிரியின் குறுக்கே கர்நாடக அரசு அணைகள் கட்டத் திட்டம் போட்டதிலிருந்தே தொடங் கியது. இப்போராட்டம் எப்போது முடிவுக்கு வரும் என்று தெரியவில்லை. 1970இல் நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு அன்றைய முதல்வர் கருணாநிதி கடிதம் எழுதியது தொடங்கி பல்வேறு கட்டப் பேச்சு வார்த்தைகள், நீதி மன்றப் போராட்டங்களுக்குப் பிறகு 1990இல் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. காவிரி நடுவர் மன்றம் அமைக்க தமிழ்நாடு 20 ஆண்டுகள் போராட வேண் டியிருந்தது. அதே நேரத்தில் குஜராத் அரசு நடுவர் மன்றம் கோரி 1968இல் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியது. மறு ஆண்டே, 1969இல் நர்மதா நடுவர் மன்றம் அமைக்கப் பட்டது. கோதாவரி மற்றும் கிருஷ்ணா ஆறுகளுக்கான நடுவர் மன்றங்கள் கோரி தொடர்புடைய மாநிலங்கள் 1962 முதல் கடி தங்கள் எழுதின. 1969இல் நடுவர் மன்றங்கள் அமைக்கப்பட்டன. தமிழ்நாட்டின் கோரிக் கைக்கு ஏன் 20 ஆண்டுகள் தேவைப் பட்டன? காரணம் பேச்சு வார்த்தை என்ற கர்நாடகாவின் இழுத்தடிப்புக்கு ஆதரவாக இந்திய அரசு ஒத்துப் போனது.

1990இல் நடுவர் மன்றத்திடம் தமிழ்நாடு இடைக்கால நிவாரணம் கேட்டது. நடுவர் மன்றம் மறுக்கவே உச்சநீதிமன்றம் சென்றே இடைக்கால நிவாரணமாக 205 ஆ.மி.க தண்ணீரைப் பெற்றோம். இடைக்காலத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட, நடைமுறைப் படுத்தப் போராடினோம். இடைக்கால நிவாரணமான 205 ஆ.மி.க. நீரைக் கர்நாடகம் ஒரு போதும் வழங்கியது இல்லை. காவிரி நடுவர் மன்றம் தனது இறுதித் தீர்ப்பை வழங்க 16 ஆண்டுகள் எடுத்துக் கொண்டு 2007இல் தான் வழங்கியது. இத்தீர்ப்பை அரசிதழில் வெளியிட உச்சநீதிமன்றம் செல்ல வேண்டிய தாயிற்று. 6 ஆண்டுகள் கழித்து இத்தீர்ப்பு 2013இல் தான் அரசிதழில் வெளியிடப் பட்டது. ஒரு தீர்ப்பு அரசிதழில் வெளியிட்டால் அது உச்சநீதிமன்றத் தீர்ப் புக்கு இணையாகக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். இதுநாள் வரை அது நடைமுறைப்படுத்த வில்லை. காவிரி நடுவர் மன்ற உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்த, காவிரி மேலாண்மை வாரியம், காவிரி ஒழுங்காற்று குழு வேண்டும் என தமிழ் நாடு போராடிக் கொண்டிருக் கும்போதே, தமிழ்நாடு பெற்ற காவிரி உரிமையைக் குழி தோண்டிப் புதைக்க மோடி அரசு “தேசியத் தண்ணீர்ச் சட்டக வரைவு 2016” என்ற ஒற்றைத் தீர்ப்பாயத்தைக் கொண்டு வந்தது. அதற்கு எதிராகப் போராட வேண்டியி ருந்தது. காவிரி மேலாண்மை வாரியம், காவிரி ஒழுங்காற்றுக் குழு அமைக்க, தமிழ்நாடு உச்சநீதிமன்றம் சென்றது. காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க ஒத்துக் கொண்ட இந்திய அரசு பிறகு மோடி அரசின் ஆலோசனைப்படி காவிரி மேலாண்மை வாரி யம் அமைக்க, ஆணையிட உச்சநீதிமன்றத் திற்கு அதிகாரம் இல்லை என வாதிட்டது. இதன் மூலம் மோடி பி.ஜே.பி. அரசு கர்நாடகாவின் சதித் திட்டங்களுக்கு ஆதரவாக செயல்படுவது வெளிச்சத்துக்கு வந்தது. பல்வேறு போராட் டங்களுக்குப் பிறகு காவிரி மேலாண்மை வாரியம் ஒரு வழியாக 2018 ஜூனில் அமைக் கப்பட்டது. இவ்வாறு தமிழ் நாடு காவிரி உரிமைக்காக நடத்திய போராட் டத்தைத் தொகுத்தால் தமிழர்களது காவிரியின் ஒவ்வொரு உரிமையையும் இந்திய அரசு தானாக முன்வந்து செய்யாததைப் புரிந்து கொள்ள இயலும். ஒவ்வொரு உரிமைக்காகவும் தமிழ்நாடு உச்சநீதிமன்றத்தின் கதவுகளைத் தட்ட வேண்டியிருந்தது. அதற்குக் கூட இந்திய அரசு முட்டுக்கட்டைகளைப் போட்டது.

▼▼▼

***கீழ்ப்படுகை நாடுகளுக்கான பங்கு உலகெங்கும் குறைக்கப்பட்டதே இல்லை. ஆனால் சுதந்திர இந்தியாவில் தமிழ்நாட்டின் பங்கு படிப்படியாக சட்டத்தின் பெயரால் குறைக்கப்பட்டுள்ளது.***

▲▲▲

### காவிரி மேலாண்மை வாரியத்தின் அத்துமீறல்

காவிரி மேலாண்மை வாரியம் தமிழ்நாட்டிலுள்ள மேட்டூர் அணை, பவானி சாகர் அணை, அமராவதி நீர்த் தேக்கம், கர்நாடகத்திலுள்ள கிருஷ்ணராஜ சாகர், ஏமாவதி, ஏரங்கி, கபினி அணைகள் மற்றும் கேரளாவிலுள்ள பாணாசுர சாகர் அணை ஆகியவற்றைக் கண்காணித்து உச்சநீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும். அதில் ஒரு அடிகூட முன் னேறவில்லை. மாறாக, கர்நாடகாவின் சதித் திட்டங்களுக்குத் துணை போகிறது. கிருஷ்ண ராஜசாகர், கபினி அணைகளிலிருந்து அதிக மழையால் மேட்டூருக்கு வரும் உபரி நீரைத் தடுக்க மேகே தாட்டு அணையை கட்ட கர்நாடகம் திட்டம் போட்டுச் செயல் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதனை எதிர்த்துத் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளது. இந் நிலையில்காவிரிமேலாண்மை வாரியத்தின் தற்போதைய தலைவர் எஸ்.கே. ஹெல்தர் வரும் கூட்டத் தொடரில் மேகே தாட்டு அணை கட்டுவது குறித்து விவாதிக்கப்படும் என தமிழ்நாட்டின் மீது தாக்குதல் தொடுத்துள்ளார். மேகேதாட்டு அணைச் சிக்கல் உச்ச நீதிமன்றத்தில் இருப்பதால் இதனை விவாதிக்க காவிரி மேலாண்மை வாரியத்திற்கு அதிகாரமில்லை என தமிழ்நாடு அரசு கூறுகிறது.

▼▼▼

***6 ஆண்டுகள் கழித்து இத்தீர்ப்பு 2013இல் தான் அரசிதழில் வெளியிடப்பட்டது. ஒரு தீர்ப்பு அரசிதழில் வெளியிட்டால் அது உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு இணையாகக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.***

▲▲▲

காவிரி நடுவர் மன்றத்தின் தலைவராக சித்ததேவ் முகர்ஜி இருந்தார். அவரின் அணுகுமுறையில் கர்நாடகத்திற்குச் சந்தேகம் எழுந்தது. இந்தப் பதவியில் சித்ததேவ் முகர்ஜி நீடிக்கக் கூடாது என்று அப்போதைய கர்நாடக முதல்வர் தேவேகவுடா கர்நாடக உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். 1996இல் முகர்ஜியே பதவியை ராஜினாமா செய்தார். அதே போல் தமிழ்நாடு அரசு எஸ்.கே. ஹெல்தர்மீது வழக்குத் தொடுக்க வேண்டும். அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்.

கர்நாடகாவில் சட்டத்திற்குப் புறம்பான அணைகள் இந்திராவின் அவசர நிலைக் காலத்தில் கட்டப்பட்டவையாகும். அப்போது மத்தியிலும் கர்நாடகவிலும் காங்கிரசு ஆட்சியே இருந்தது. தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சி இருந்தது. இச் சூழலைக் கர்நாடகம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. தற்போது கர்நாடகாவிலும், மத்தியிலும் பி.ஜே.பி. ஆட்சியே இருக்கிறது. மோடி அரசு நீதித்துறை உள்பட எல்லாவற்றையும் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்களைக் கொண்டு பாசிசமயமாக்கி வருகிறார். இச்சூழலைக் கர்நாடக அரசு பயன்படுத்த முயற்சிக்கிறது. இந் நிலையில் மோடி அரசால் நியமிக்கப்பட்ட எஸ்.கே. ஹெல்தர் மேகேதாட்டு அணைக்கு ஆதரவாகப் பேசி வருகிறார். தமிழ்நாட்டிற்கு ஒரு சொட்டுத் தண்ணீர் தர முடியாது என்று, ஆளும் பிஜேபி, காங்கிரசு, இடது, வலது கம்யூனிஸ்டு கட்சிகள் உட்பட எல்லாம் ஓரணியில் திரண்டு நிற்கின்றன. மேகேதாட்டு அணைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என 150 கி.மீட்டர் நடைப்பயணத்தைக் காங்கிரசு கட்சி நடத்தியுள்ளது. எனவே தமிழ்நாடு மிகவும் எச்சரிக் கையாக இருக்க வேண்டும்.

### தமிழ்நாட்டின் போராட்டத்தை மடைமாற்ற சூழ்ச்சி

உலக வரலாற்றிலேயே மிக நீண்ட தீர்க்கப் படாத சிக்கலாக காவிரிச் சிக்கல் நீடிக்கிறது. உலகில் 3,600க்கும் மேற்பட்ட ஆற்று நீர் ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. டான்யூப் ஆற்றின் தண்ணீரை 10 ஐரோப்பிய நாடுகள் சிக்கலின்றித் தங்களிடையே பங்கிட்டுக் கொள்கின்றன. இந்தியாவும் பாகிஸ்தானுடன் 1960இல் சிந்து ஆற்று உடன்படிக்கை மூலமும், 1996இல் வங்கதேசத்துடன் பராக்கு ஆற்றுநீர் உடன்படிக்கை மூலமும் சிக்கலுக்குத் தீர்வு கண்டுள்ளது. ஆனால், காவிரிச் சிக்கலைத் தீர்க்க இந்திய அரசு தயாரில்லை. இந்தியா தயாரில்லை என்பதுடன் தமிழ்நாட்டின் காவிரி உரிமையைக் குழி தோண்டிப் புதைப்பதில் ஈடுபட்டுள்ளது.

தமிழ்நாட்டின் காவிரி உரிமைக்கான போராட்டத்தை மடைமாற்ற கங்கை – காவிரி

இணைப்பு, தென்னக நதிகள் இணைப்பு மற்றும் தேசிய நதிகள் இணைப்பு போன்ற கற்பனைத் திட்டங்களை இந்திய தேசியவாதிகள் முன் வைக்கின்றனர். மோடியின் நதிகள் இணைப்புத் திட்டம் என்பது தேசிய இனங்களின் ஆற்று உரிமைகளைப் பிடுங்கி மத்திய அரசின் உரிமையாக்கிக் கொள்வதாகும், நல்ல அரசியல் தலைவர்கள் இல்லை என பெ. மணியரசன் கூறுவதுபோல தி.மு.க.வின் தலைவர் ஸ்டாலின் அதிமுக எடப்பாடி போன்றவர்கள் கங்கை - காவிரி இணைப்புக் குறித்து மோசடியை அறியாதவர்களாக உள்ளனர். இது காவிரியை உள்நாட்டு, வெளிநாட்டு கார்ப்பரேட் முதலாளிகளுக்குக் கொடுக்கும் இந்திய அரசின் திட்டமாகும். இதனை எந்த மாநிலமும் ஒத்துக் கொள்ளப் போவதில்லை. மேலும் மாற்றுப் பயிர் சாகுபடி போன்ற ஆலோசனை களை முன் வைத்துத் தமிழர்களது போராட்ட உணர்வை நீர்த்துப் போகச் செய்கின்றனர்.

மேகேதாட்டு அணை கட்டினால் கர்நாடகாவி லுள்ள மாண்டியா மாவட்டத்தில் 5 கிராமங்களும் காடுகளிலுள்ள விலங்குகளும் பாதிக்கப்படும். 10,000க்கும் மேற்பட்ட பட்டியலின பழங் குடியின மக்கள் பாதிக்கப்படுவதுடன் உயிர்ச் சங்கிலத் தொடர் அறுந்து போகும். எனவே கர்நாடக மாநிலத்திலேயே மேகேதாட்டு அணைக்கு எதிராகப் போராட்டம் கிளம்பியுள்ளது. தமிழகத்தைப் பொறுத்த அளவில் மேகேதாட்டு அணை கட்டினால் தமிழ்நாட்டின் டெல்டா விவசாயமும், குடி நீருக்காக அதனை நம்பியுள்ள மக்களும் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் கடலில் மீன் வளம் அழிந்து போகும்.

எனவே, காவிரியில் தமிழர்களின் உரிமை யைப் பறிப்பதில் கர்நாடகம், இந்திய ஒன்றியம், காவிரி மேலாண்மை வாரியம் எல்லாம் ஓரணி யில் நிற்கின்றன. உச்சநீதிமன்றமோ பாசிச மயமாகி வருகிறது.

இந்நிலையில் சட்டமன்றத் தீர்மானம் நீதிமன் றத்தை நாடியது போன்ற சட்டவாத அணுகு முறை பயனளிக்கப் போவதில்லை. இதற்கு தமிழ்நாட்டின் போர்க்குணமிக்க மக்கள் திரள் போராட்டமே பயனளிக்கும்.

எனவே **தமிழ்நாடு அரசும், தமிழக மக்களும் செய்ய வேண்டியது**

- காவிரி மேலாண்மை வாரியத்தின் தலைவர் எஸ்.கே. ஹெல்தரை நீக்கப் போராட வேண்டும்.
- தமிழ்நாட்டிலிருந்து கர்நாடகாவிற்கு செல் லும் மின்சாரத்தைத் தடுக்க வேண்டும்.
- கர்நாடகாவின்மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்.

▼▼▼

***கர்நாடகாவில் சட்டத்திற்குப் புறம்பான அணைகள் இந்திராவின் அவசர நிலைக் காலத்தில் கட்டப்பட்டவையாகும். அப்போது மத்தியிலும் கர்நாடகாவிலும் காங்கிரசு ஆட்சியே இருந்தது. தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சி இருந்தது. இச்சூழலைக் கர்நாடகம் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டது.***

▲▲▲

- தமிழக மக்கள் இந்திய அரசு அலுவலகங் களை முற்றுகை இட்டு இழுத்து மூட வேண்டும்.
- இந்திய அரசுக்கு எதிராகத் தமிழக மக்கள் ஒத் துழையாமை இயக்கத்தை முன்னெ டுக்க வேண்டும்.

ஏர்க் களத்து உழவர்கள், தொழிலாளர்கள், போர்க் களத்திற்கு வர வேண்டும். வராவிட்டால் காவிரி நமக்கில்லை.

**துணை நின்றவை:**


1. காவிரி நேற்று - இன்று - நாளை - இரண் டாம் பதிப்பு - 2020 - *பெ. மணியரசன்*

2. காவிரியின் குறுக்கே மேகேதட்டில் அணை: *பொறிஞர்கள்: முனைவர் அ. வீரப்பன் - ந. கைலாசபதி.*

3. குடகு மீட்பே காவிரிக்குத் தீர்வு *- அ. வியனரசு*

4. காவிரி வரலாறு - ‘தி இந்து தமிழ்’ *- தியாகு செப்.21, 2016*

5. நதிகள் இணைப் புத் திட்டம் ஆறு களைப் பிடுங்கி விற்கும் இந்தியா - *பேராசிரியர் த. செயராமன்*

6. காவிரி காலம் நம்மை எங்கே நிறுத்தி யிருக்கிறது? – *செந்தில்*

7. சிந்தனையாளன் - ஜூன் - 2014

8. காவிரி எல்லோ ரும் ஏமாற்றுகிறார்கள்! - விவசாய சங்கம் மட்டும்...! - *திருப்பூர் குணா*

9. மீண்டும் உயிர் பெறும் மேகதாது அணைத் திட்டம் - *சாரதாதேவி*

10. காவிரிப் பிரச்சினை - மோடி அரசே முதன்மைக் குற்றவாளி - *மகஇக - 2016*

11. காவிரி உரிமையில் வஞ்சிக்கப்படு கிறோம் *- திருமுருகன் காந்தி.*

## ஆர்.எஸ்.எஸ். ஆளுநர்

# ஆர்.என். ரவியே, வெளியேறு!

## ஜூலை 16ஆம் தேதி

# ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டம்


❑ **பாலன்**

ஒருங்கிணைப்பாளர்,
பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணி


**ஆர்எஸ்எஸ்** ஆளுநர் ஆர் என் ரவியே வெளியேறு! போட்டி அரசாங்கம் நடத்தாதே! ஒன்றிய அரசே ஜிஎஸ்டி வரிமுறையை கைவிடு!! மாநில அரசுகளின் வரி அதிகார உரிமையை பறிக்காதே!! பாசிச பாஜக ஆட்சியை வீழ்த்துவோம், இடது ஜனநாயக சக்திகளை வலுப்படுத்துவோம். என்ற முழக்கத்துடன், பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணி, தமிழக ஆளுநர் மாளிகையை, வருகின்ற ஜூலை 16ஆம் தேதி, முற்றுகையிட்டு போராட்டம் நடத்த புரட்சிகர ஜனநாயக சக்திகளுக்கும் தமிழக மக்களுக்கும் அறைகூவல் விடுத்துள்ளது.

**பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணி அறைகூவல்**

தமிழக சட்டமன்றம் நிறைவேற்றிய 20 **மசோதாக்கள்,** தீர்மானங்கள் ஆளுநர் கையொப்பம் இடாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. ஒன்றிய பாசிச மோடி அரசு, தமிழக சட்டமன்றத்தை வெறுமனே மசோதா இயற்றக்கூடிய மன்றமாக ஆளுநர் வழியாக அழிக்கத் தொடங்கியுள்ளது. இந்திய நாடாளுமன்ற அமைப்பு முறையில் பெயரளவில் இருக்கின்ற அரைகுறை கூட்டாட்சி வடிவங் களை ஒழித்துவிட்டு ஒரு பாசிச சிறுகும்பல் ஆட்சியின் கீழ் அனைத்தையும் கொண்டு போவதற்காக நாடாளுமன்ற சனநாயகத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் தூக்கி வீசி வருகிறார்கள். அதைத் தமிழகத்தில் செயல்படுத்துவதற்கு ஆளுநர் ரவியை முகவராக ஒன்றிய மோடி அரசு பணியமர்த்தியுள்ளது. ஆளுநர் ரவி இதற்கு முன்பாக நாகா தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக நாகாலந்தில் ஆளுநராகப் பணியமர்த்தப்பட்டவர். அது மட்டுமின்றி உளவுத்துறையில் பணியாற்றிய அதிகாரவர்க்கத்தைச் சார்ந்த நபர். இந்திய அரசுக்கும் நாகா சோசலிச கவுன்சில் என்ற விடுதலைப் போராட்ட அமைப்புக்கும் நடைபெற்றுவரும் பல்லாண்டு காலப் பேச்சுவார்த்தையில் பங்கேற்று அதை சீர்குலைத்தவர். பேச்சுவார்த்தையில் ஒப்புக் கொண்ட விசயங்களைக் கூட நடைமுறைப் படுத்தாமல் இழுத்தடித்துக் காலங்கடத்தி நாகா விடுதலைப் போராட்டத்தைப் பின்னடையச் செய்தவர். அங்கு மனித உரிமைச் செயற்பாட்டாளர், அரசியல் சுதந்திரத்துக்கு போராடக் கூடிய நாகா விடுதலைச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரையும் சிறையில் அடைத்து சனநாயகத்தின் குரல்வளையை நெரித்தவர். ஆளுநர் பதவியில் ஆர்.என்.ரவி வெளியேறிய போது நாகாலாந்து தழுவிய அளவில் மக்கள்



அதை வரவேற்றனர், கொண்டாடினர்.

கடந்த எட்டாண்டுக் காலமாக மோடி ஆட்சியின் பல்வேறு சட்டங்கள், கொள்கைகளுக்குத் தமிழ்நாடு வலுவான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்கள், இரண்டு சட்டமன்றத் தேர்தல் என நான்கு முக்கியத் தேர்தல்களிலும் பா.ச.க.வால் தமிழகத்தில் குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்ட முடியவில்லை. இத்தேர்தல்களில் பாசக எதிர்ப்பு மோடி எதிர்ப்பு அலையே தமிழ்நாட்டில் வீசியதாக அறியப்படுகிறது. இந்த எட்டாண்டுகள் மட்டுமின்றி மாநில உரிமை, பார்ப்பன எதிர்ப்பு சமூக நீதி, வடவர் ஆதிக்க எதிர்ப்பு, வைதீக இந்துமத எதிர்ப்பு ஆகியவற்றின் உலைக்களமாக தமிழ்நாட்டு அரசியல் இருந்து வருகின்றது. இதை உடைத்தெறிவதற்கு பாசக என்ற கட்சி மட்டும் தமிழ்நாட்டில் செயல்பட்டால் போதாது, கூடவே ஒன்றிய அரசின் அதிகாரத்தை மாநிலத்தின் அடிநுனி வரைப் பாய்ச்சுவதற்கான கருவியாக ஆளுநரைப் பயன்படுத்துகிறது பா.ச.க. அத்தகைய நோக்கத்தை நிறைவு செய்வதற்காக ஆர்.என். ரவியை ஆளுநராகப் பணியமர்த்தியுள்ளது. தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவுகளான நீட் தேர்வு எதிர்ப்பு, புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு என ஒவ்வொரு விவகாரத்திலும் அதற்கு எதிரான கொள்கைப் பரப்புரையை ஆளுநர் பொறுப்பில் இருந்தபடி செய்து வருகிறார் ரவி. முதல் தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஆளுநர் உரையில் பேசப் பட்டவற்றை எதிர்த்து அடுத்த நாள் பொது வெளியில் பேசுகிறார். பல்கலைக் கழகங்கள் தொடங்கி ஆதீனங்கள் வரை பல்வேறு அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களிலும் நேரடியாகத் தலையிட்டுக் காவி நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துகிறார் அவர். மதச் சிறுபான்மையினரின் அமைப்புகளுக்கு எதிராக நச்சுக் கருத்துகளைப் பரப்புகிறார். தமிழக வளர்ச்சிக்கு எதிராகவும், சனாதனத்திற்கும் இந்துராஷ்டிரத்திற்கும் ஆதரவாகவும் அன்றாடம் கொள்கைப் பரப்புரை செய்கிறார். ஆளுநர் மாளிகையைத் தமிழ்நாடு அரசுக்கு எதிரான புகாரளிக்கும் மையமாகவும் தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு சமூக சக்திகளை ஆர்.எஸ்.எஸ். பா.ச.க.விற்குப் பின்னால் அணி திரட்டுவதற்கான அலுவலகமாகவும் செயல் படுத்தி வருகிறார் அவர். ஒன்றிய அரசின் அதிகாரமும் உளவுத் துறைப் பின்னணியும் ஆர்.எஸ்.எஸ்.இன் பின்புலமும் இணைந்த ஒருவராக தமிழ்நாட்டில் போட்டி அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கிறார். இந்தக் காரணங்களுக்காகவே ஆர்.எஸ்.எஸ். ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்பட வேண்டும் என்ற எதிர்ப்பு எழுந்துள்ளது.

ஆளுநர் பதவியே மாநில அதிகாரத்திற்குக் கடிவாளம் போடவும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் செய்யப்பட்ட ஏற்பாடு என்ற வகையில் ஆளுநர் பதவியை முற்றாக ஒழித்துக்கட்டுவதற்காகவும் போராட வேண்டும்.

ஜி.எஸ்.டி வரிவிதிப்புமுறை மாநில அரசுக்கு இருந்த வரிவிதிப்பு அதிகாரத்தைப் பறித்தது. ஜி.எஸ்.டி. வரிமுறையின் வழியாக மாநில அரசின் வருவாயைச் சூறையாடிப் போனது ஒன்றிய அரசு. ஜி.எஸ்.டி. கவுன்சில் என்ற ஏற்பாட்டின் மூலம் வரி விதிப்பது தொடர்பில் நாடாளுமன்றத்திற்கு இருந்த அதிகாரமும் பறிக்கப்பட்டது. நாடாளுமன்றத்திற்கு வெளியே மாநிலங்களுக்கும் ஒன்றிய அரசுக்கும் சமமான பிரதிநிதித்துவம் இல்லாத ஜி.எஸ்.டி. கவுன்சிலின் வழியாக முடிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநில அரசுகளுக்குப் பகிர்ந்து அளிக்க வேண்டிய தொகையையும் ஜி.எஸ்.டி முறையால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு இழப்பீடாக வழங்குவதாக ஒப்புக்கொண்ட தொகையையும் இழுத்தடிப்பது, காலந்தள்ளுவது என்பது தொடர் கதையாக மாறியுள்ளது. கொரோனா இரண்டாம் அலை காலத்தில் ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகையை வழங்க முடியாத

தற்குக் காரணம் கடவுளின் செயல் என்று கைவிரித்தது ஒன்றிய மோடி அரசு. மாநில அரசுகளோ பத்திரப் பதிவு, மோட்டார் வாகனம், எரிபொருள் விற்பனை, மது விற்பனை போன்ற சிற்சில துறைகளில் இருந்து பெறக் கூடிய வரிவருவாயைச் சார்ந்து தமது செல வினங்களை எதிர்கொண்டு வருகின்றன.

இந்தச் சூழலில், மேலும் பல்வேறு விவகாரங்களை ஜி.எஸ்.டிக்குள் கொண்டு வருவது, பத்திரப் பதிவுத்துறையையும் ஒரே தேசக் கொள்கையின் பெயரால் ஒன்றிய அளவில் மாற்றுவதன் மூலம் மாநில நிதியதி காரத்தை நூறு விழுக்காடு இல்லா தொழிப்பது என்ற திசையில் நகர்ந்து கொண்டிருக்கிறது. எவ்வித நிதியதிகாரமும் இல்லாத மாநகராட்சி போல் மாநில அரசை மாற்றியமைக்கும் வேலைகள் நடந்து வருகின்றன. மாநில வரிவிதிப்பு அதிகாரத்தைப் பறித்து, ஜி.எஸ்.டி. யின் வழியாக நாடு தழுவிய அளவில் வரியைத் திரட்டிக் கொள்ளும் அதே நேரத்தில் வரிச்சலுகை, மானியம், வாராக் கடன் தள்ளுபடி, ஊக்குவிப்புகள் என பன்னாட்டு , உள்நாட்டுக் கார்ப்பரேட்களுக்கு இலட்சக் கணக்கான கோடிகளை அள்ளி இறைத்துக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. மாநிலங் களின் அரசியல் அதிகாரம் பறிக்கப்பட்டு ஏகபோகப் பாசிச சிறுகும்பலின் கைகளில் ஒப்படைக்கப்படுகிறதோ அதுபோல பொரு ளியல் அதிகாரத்தைப் பறித்து நாடாளு மன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் அப்பால் ஏகபோக நிதிமூலதன சிறுகும்பல் கையில் ஒப்படைத்து வருகிற பாசிச பா.ச.க. அரசு. மாநில அரசுகள் தமக்குக் கிடைக்கும் சொற்பான வரி வருவாயில் இருந்தும் ஒன்றிய அரசிட மிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் பன்னாட்டு நிதிநிறுவனங்களிடமிருந்தும் வெளிச்சந்தையில் இருந்தும் பெறும் கடனில் இருந்தும் மாநிலங்களில் தமது நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் இந்த சொற்பமான வரி வருவாயில் இருந்தே தமது சமூக நலத் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகிறது. ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு முறையால் ஏற்பட்டுள்ள வரி வருவாய் இழப்புகளின் காரணமாக அத்திட்டங்களை தொடரவும் விரிவாக்கவும் முடியாத நிலைக்கு மாநிலங்கள் தள்ளப்பட்டுள்ளன. நிதியற்ற கையறு நிலை என்ற பெயரில் மென்மேலும் தனியார்மய, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து என யாவற்றிலும் தற்காலிக, ஒப்பந்தப் பணிகள் என்ற மக்கள் விரோதக் கொள்கையை அமல் படுத்தக் கூடிய நிலைக்கு மாநில அரசுகள் தள்ளப்படுகின்றன.

இதை எதிர்த்து முறியடித்து மாநிலப் பொருளியல் இறைமையை மீட்பதற்கான முதல் படியாகவே ஒரே தேசம், ஒரே வரி என்ற நோக்கில் செயல்படுத்தப்படும் ஜி.எஸ்.டி. வரிவதிப்புமுறையை ஒழித்துக்கட்டக் கோரிப் போராட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எனவே, பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணி வருகிற ஜூலை 16 அன்று நடத்தவிருக்கின்ற ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டத் திற்கு மேற்கண்ட கோரிக்கை முழக்கத்தோடு அனைவரும் அணிதிரள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணி என்ற பொது மேடையின் முதல் நிகழ்வு இது. இந்த நிகழ்வில் பாசிச எதிர்ப்பு முன்னணியில் உறுப்பு அமைப்புகளாக பங் கேற்காத அமைப்புகளும் சனநாயக ஆற்றல் களும் கலந்துகொள்ளுமாறு அழைக்கிறோம். பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணியை வலுப் படுத்தி பாசிச மோடி - அமித்ஷா சிறுகும்பல் சர்வாதிகார ஆட்சியை வீழ்த்துவோம் என்று சனநாயக ஆற்றல்கள் அனைவரையும் அறைகூவி அழைக்கிறோம்.

## நரி இடம் போனால் என்ன? வலம் போனால் என்ன?

*மோடி அரசு நாடாளுமன்ற கட்டிடத்தை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்தது, தற்போது ஒன்றிய அரசின் மூன்று சிங்கங்களின் சின்னத்தையும் அதன் தரத்தையும் மாற்றுவதாக சர்ச்சை எழுந்துள்ளது. ஏன் நாடாளுமன்றம் வளாகம் மாற்றப்படுகிறது என்பதற்கான பதில் வரலாற்றிலேயே உள்ளது. இட்லர் செர்மனிய நாடாளுமன்றமான ரெய்ஸ்டாக்கை எரித்து அட்டூழியம் புரிந்ததை நினைவில் கொள்ள வேண்டும். அனைத்து பாசிஸ்ட்டுகளும் ஒரே மாதிரி தான். அவர்கள் அனைவரும் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் தான் வீசப்படுவார்கள்.*

# அதிகாரப்பிரிவின் கோட்பாடும் ஜனநாயகமும்

❑ வழக்கறிஞர்
**இரா.வைத்தீஸ்வரன்**



**ச**ட்டம் என்பது சமுதாயத்தில் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நீதித்துறை அல்லது ஆட்சித் துறை செயல்களுக்கு அடிப்படையாக உள்ள அமைப்பு முறையாகும் என்று முதலாளித்துவ அறிஞர்கள் பொதுவாக கூறுகிறார்கள். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 13-வது சட்டக் கூறு, சட்டம் என்பது இந்திய ஆட்சிப்பரப்பில் சட்டத்தின் செயலாற்றல் உள்ள அவசர சட்டம், ஆணை, துணைவிதி, விதி, ஒழுங்கு முறை விதி, அறிவிக்கை, மரபு வழக்கம், வழக்காறு ஆகியவற்றை உள்ளடக்கும் என கூறுகிறது.

### நவீன அரசியல் சட்டம்

மார்க்சிய ஆசான் காரல் மார்க்ஸ் ஒரு நவீன அரசில், சட்டம் என்பன

1. பொதுப்படையான பொருளாதார நிலை யுடன் பொருந்தியிருக்க வேண்டும்.

2. அந்த பொருளாதார நிலையின் வெளி யீடாக இருக்க வேண்டும்.

3. உள் முரண்பாடுகளின் காரணமாக தன்னைத்தானே நிராகரித்துவிடாதபடி உள் ளார்ந்த ஒத்திசைந்த வெளியீடாக அது இருக்க வேண்டும். என்கிறார்.

மனித சமுகத்தின் நீண்ட வரலாற்றில் அநாகரிக காலம், நாகரிக காலம், நவீன காலம் ஆகியவற்றைக் கடந்து தற்போது உலகமய மாக்கல் காலத்தில் இருக்கிறது. நாகரிக காலத்தில் இருந்த முடி அரசுகளில், அரசனே அரசின் தலைவனாக இருந்தான். அரசனின் ஆணைகளே சட்டங்களாக மதிக்கப்பட்டன. அரசன் அனைத்துக்கும் தலைவனாக இருந்தான். சட்டங்களையும், விதிகளையும் முடியாட்சி காலத்தில் அரசனே இறுதி செய்தான். எதேச்சதிகார முடியாட்சிக்கு எதிராக மக்கள் போராட்டங்களும், புரட்சிகளும் வெடித்ததன் விளைவாக ஏற்பட்ட அரசியல் பொருளாதர மாற்றங்கள் காரணமாக மனித சமுகத்தின் நவீன காலக்கட்டம் தொடங்கியது. முடியாட்சியின் எதேச்சதிகார சட்டங்களுக்கு எதிராக ஏற்பட்ட புரட்சிகளின் விளைவாக சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கருத்துக்கள் தோன்றின. இந்த முழக்கங்கள் நவீன காலத்தின் தொடக்கத்தை அறிவித்தது. மக்களாட்சி என்பதற்கு முதலாளித்துவ அறி ஞர்கள் மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் அரசாங்கம் என விளக்கம் கூறினார்கள். இதற்காக நாடாளுமன்றம், சட்டமன்றம் போன்ற அமைப்புகள் தோன்றின. நாடாளு மன்றம், சட்டமன்றம் போன்ற அமைப்புகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி களால் நிரப்பப்பட்டன. ஆனால் முடியாட்சி காலத்தில் சட்டத்தை இயற்றும் அமைப் புக்கும், செயல்படுத்தும் அமைப்புக்கும் தலைவனாக அரசனே இருந்தான். மக்க ளுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களாட்சி என்று வரையறுக்கப்பட்ட முதலாளித்துவ ஜனநாயக அமைப்பில், மக்கள் பிரதிநிதிகள் சட்டத்தை இயற்றுபவர்களாக இருக்கிறார்கள், அதைச் செயல்படுத்தும் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்படவில்லை .

### இரட்டை ஆட்சி முறை

அதிகாரப் பிரிவின் கோட்பாடு என்ற நவீனகாலக் கோட்பாடு சட்டங்களை இயற்று வதையும், அதனைச் செயல்படுத்துவதையும் தனித்தனியே பிரித்துவிட்டது. இந்த அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு என்பதே ஜன

நாயகத்தின் அடிப்படைக் கோட்பாடு என முதலாளித்துவ அறிஞர்களால் அவ்வப்போது சொல்லப்படுகிறது. முடியாட்சி ஒழிக்கப்பட்டு, மக்களாட்சி ஏற்பட்ட இடங்களில் முடியாட்சிக் காலத்தில் அனைத்து அரசியல், பொருளாதார, பன்பாட்டு நிறுவனங்களுக்குத் தலைவனாக இருந்த அரசன் வீழ்த்தப்பட்ட இடத்தில் மக்களின் பிரதிநிதிகள் அமர்த்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நவீன முதலாளித்துவ ஜனநாயக நாடுகளில் சட்டத்தை இயற்றுவ தற்கு மட்டும் மக்கள் பிரதிநிதிகளும், அதை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகளும் அமர்த்தப்பட்டார்கள்.

## நிலையான இராணுவம்

மன்னர் காலத்தில் இருந்த நிலையான படை என்பது ஒழிக்கப்பட்டு, மக்களின் இராணுவம் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நவீன முதலாளித்துவ ஜனநாயக நாடுகளில், மக்கள் பிரதிநிகளுக்கு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் மறுக்கப்பட்டதுடன், மன்னர் காலத்தின் நிலையான இராணுவம் தக்கவைக்கப்பட்டது. அரசின் அனைத்து உறுப்புகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற மக் களாட்சித் தத்துவம் மறுக்கப்பட்டு, அரசு உறுப்புகளான அதிகாரிகள், நீதிபதிகள் போன்றவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் படாமல் நியமிக்கப்பட்டனர். எனவே மக்களாட்சி என்ற கருத்து நவீன கால அரசுகளில் முழுமை பெறவில்லை . மக்கள், முடியாட்சியின் ஏதேச்சதிகாரத்திற்கு எதிராக போராடி மக்களாட்சியை நிறுவ விரும்பிய போதும் நவீனகால முதலாளித்துவ ஜனநாயக ஆட்சி வடிவங்கள் முழுமையான மக் களாட்சியை அளிக்கவில்லை.

## வெளிப்படைத் தன்மை இல்லை

இத்தகைய குறைபாட்டினை இன்றைக்கு நடைமுறைகளில் உள்ள அனைத்துச் சட்டங் களிலும் காணலாம். இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர், அரசியலமைப்புச் சட்டத்தின் 395வது சட்டக் கூறு இரண்டு சட்டங்களைச் செல்லாது என அறிவிக்கிறது. ஒன்று 1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கம் சட்டம், இரண்டாவது 1947ஆம் ஆண்டின் இந்திய விடுதலைச் சட்டம், இந்த 1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கம் சட்டத்தின் பெரும்பகுதியை கொண்டே 1949ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச்சட்டம் உருவாக்கப்பட்டது.



**இதில் நாம் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு, அதற்கு முரணான பழைய சட்டங்கள் ஒழிக்கப்பட்டு விட்டன என்பதை இந்திய அரசியலமைப்புச் சட்டம் வெளிப்படையாக அறிவிக்கவில்லை.**

## பழங்கால மரபுகள் சட்டமாகின

அதேசமயம் சட்டக்கூறு 13(3)(a)-ல் சட்டம் என்பதற்குக் கூறும் வரைவிலக்கணத்தில் “Custom or usage having the territory in India” என்ற வாசகத்தைச் சேர்த்துள்ளார்கள். அதாவது முடியாட்சிக் காலத்தில் இருந்தும் வெள்ளை வந்தேறி ஏகாதிபத்தியக் காலத்தில் இருந்தும் நடைமுறையில் இருந்துவரும் பழங்கால மரபு வழக்கங்களும், வழக்காறுகளும், சட்டம் எனக் கருதப்படும் என இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.

இதுமட்டுமல்ல, மேலும் இந்திய அரசியல மைப்புச் சட்டக் கூறு 372(1) பின்வருமாறு கூறுகிறது.

இந்த அரசமைப்பின் தொடக்க நிலையை ஒட்டி முன்பு இந்திய ஆட்சி நிலவரையில் செயல்பாட்டில் இருந்த சட்டங்கள் அனைத் தும் சட்டமன்றத்தாலோ, அல்லது பிற அதிகார அமைப்பாலோ நீக்கவோ, திருத்தவோ செய்யப்படாத வரையில் தொடர்ந்து அது செயல்பாட்டில் இருக்கும் என கூறுகிறது. அதாவது இந்திய அரசமைப்புச் சட்டம் ஒரு நவீன கால புதிய மக்களாட்சிக்கான சட்டம் என்பதாக விளம்பர படுத்தப்பட்டாலும், அந்த சட்டத்தின் சட்டக் கூறுகள் காலாவதியான, நவீன கால நடைமுறைக்கு ஒவ்வாத, ஏற்ற தாழ்வைக் கடைப்பிடிக்கும் பழைய சட்டங்களை மரபுகளை பழக்க வழக்கங்களை, சட்டம் என்ற வரையறைக்குள் கொண்டு வருவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பழைய சட்ட நடைமுறைகளை ஒழிக்க வேண்டுமெனக் கூறி கொண்டுவரப்பட்ட புதிய சட்டத்தினுள் பழைய நடைமுறைகளும், விதிகளும் உயிர்ப் புடன் இருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

**தொடரும்..**

# ஜனபதங்கள் நெருங்கி வரும் பேரபாயம்

❑ பாரி



**ஆர்.**எஸ்.எஸ். ஆளுநர் ஆர்.என். இரவி தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய 21 தீர்மானங்களைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் கிடப்பில் போட்டுள்ளார். இதில் பல தீர்மானங்கள் பா.ஜ.க. தவிர ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டவை. ஆளுநர் ஆர்.என். இரவியின் செயல் தமிழக மக்களையும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தையும், இந்தியா மிகப் பெரிய ஜனநாயக நாடு என சொல்லப்படுவதையும் இழிவுபடுத்துவதாகும். இதனைக் கணக்கிலெடுத்த திமுக கொள்கைப் பரப்புச் செயலாளர் ஆ. இராஜா மாநில சுயாட்சியை வலியுறுத்திப் பேசினார். இதற்கு பதிலாக "தமிழ்நாட்டை பாண்டிய நாடு, பல்லவ நாடு என்று இரண்டாகப் பிரிப்போம். அதற்கான இடத்தில்தான் நாங்கள் இருக்கிறோம்" என பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் நயினார் நாகேந்திரன் எம். எல்.ஏ., கூறியுள்ளார். இதற்கு முன் பா.ஜ.க.வின் முன்னாள் தமிழகத் தலைவர் எல். முருகன் கொங்கு நாட்டை உருவாக்குவோம் என செய்தியைக் கசிய விட்டார். 2024 தேர்தலுக்குப் பிறகு பிரதமர் மோடி இந்தியாவை 50 மாநிலங்களாக உருவாக்குவார் என கர்நாடக அமைச்சர் உமேஷ் கட்டி கூறியுள்ளார். இந்நிலையில் "தமிழகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டிய தேவையில்லை" என மத்திய இணையமைச்சர் வி.கே.சிங் திருநெல்வேலியில் பா.ஜ.க. நிர்வாகிகள் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். இவை ஆராயப்பட வேண்டும்.

இராஷ்ட்ரிய சுயம் சேவக் (ஆர்.எஸ்.எஸ்.) சங்கம் அதன் துணை அமைப்புகளான பா.ஜ.க. உள்ளிட்ட சங்பரிவார் கும்பல் பார்ப்பனிய மேலாதிக்கத்தைக் கொண்ட சாதிய சமுதாயத்தைப் பாதுகாப்பதாகும். பார்ப்பனர்களிலேயே மிக உயர்வானவர்களாகக் கருதிக் கொள்ளக் கூடிய சித்பவன் பார்ப்பனர்களை மட்டுமே கொண்டு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு 1925 நாகபுரியில் தோற்றுவிக்கப்பட்டது. அதன் நோக்கம் இந்துராஷ்ட்ரம் அமைப்பது. இந்து ராஷ்ட்ரம் என்பது இன்றைய இந்திய எல்லைகளுடன் வடக்கே திபெத் முதல் தெற்கே இலங்கை வரையிலும், மேற்கு ஆப்கானிஸ்தானத்திலிருந்து கிழக்கே பர்மா வரையிலும் எல்லைகளை விரிவாக்கும் காலனியத் தன்மை கொண்டதாகும். இந்து ராஷ்ட்ரம் என்று சொல்லக் கூடிய அகண்ட பாரதத்தில் முஸ்லீம்களுக்கு, கிறித்தவர்களுக்கு, கம்யூனிஸ்டுகளுக்கு இடமில்லை. மனித குலத்தையே கொன்றொழித்த ஹிட்லரும், முசோலினியும் வகுத்த கொள்கைகள் தான் இவர்களுக்கு வழிகாட்டி, உலகை ஆளப் பிறந்தவன் தூய ஆரியன் என ஹிட்லர் சூளுரைத்தான். அது போல இந்து ராஷ்ட்ரத்தை ஆள சூளுரைத்துள்ளனர். ஆரிய பார்ப்பனர்கள் அப்படியொரு இந்து ராஷ்ட்ரத்தை உருவாக்கும் முயற்சியில் ஆர்.எஸ்.எஸ். கும்பலும் அதற்குத் துணையாக மோடிக் கும்பலும் ஈடுபட்டுள்ளன. பார்ப்பனர்கள் எவ்வளவுதான் ஆரியத் தூய்மை பேசினாலும், இந்தியாவிலுள்ள பார்ப்பனர் தங்களை ஆரியர்கள் எனக் கூறுவதை ஹிட்லர் ஏளனம் செய்தான்.

இப்பார்ப்பனக் கூட்டம் மன்னர்கள் காலத்திலும், கிழக்கிந்திய கம்பெனியிலும், பிரிட்டிஷ் ஆட்சியிலும் அதிகார வர்க்கமாக

மக்களை ஒடுக்குவதில் ஆலோசனை கொடுப்பவர்களாக இருந்தனர்.

இந்தியாவில் இருந்து வருகின்றனர். பெரும் நில உடைமை, முதலாளிய வர்க்கத்துடன் குறிப்பாக பார்ப்பன பனியா முதலாளிகளுக்கு தொண்டூழியும் செய்யும் அதிகார வர்க்கமாக இருக்கின்றனர். இந்தியாவிலுள்ள பார்ப்பனிய - பனியா முதலாளிகளின் பெரும் மூலதனத்திற்கு அகண்ட பாரதம் என்ற விரிவான சந்தை தேவைப்படுகிறது. அகண்ட பாரதம் என்பது காலனி தன்மை கொண்டது. அதற்கு உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் மக்களிடமிருந்து இயல்பிலேயே எதிர்ப்புகள் எழும். இதனை ஒடுக்குவதற்கு இந்திய ஆளும் வர்க்கம் கண்டுபிடித்த கொள்கையே ஜனபதம்.

கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்கு முன் வட இந்தியாவில் மன்னர்களது முடியாட்சிப் பகுதிகள் ஜனபதம் என்றும், முடியாட்சி இல்லாத குடியரசு சாயல் கொண்ட அல்லது சுழற்சி முறையிலான இனக் குழு அரசுகள் கணம் என்றும் அழைக்கப்பட்டன. பார்ப்பனிய மேலாதிக்கம் கொண்ட சாதிய சமூக அமைப்பே ஜனபதம் ஆகும். அதில் மன்னன் கூட பார்ப்பனுக்கு கட்டுப்பட்டவன். பார்ப்பனர்களே முழு அதிகாரத்தையும் கொண்டிருந்தனர். அப்பேர்ப்பட்ட ஜனபதத்தை இந்தியாவில் உருவாக்கும் நோக்கங் கொண்டு இந்தியாவிலுள்ள 29 மொழி வழி மாநிலங்களை 100 ஜனபத மண்டலங்களாக பிரிக்க திட்டம் தீட்டியுள்ளனர். 1951 தேர்தல் அறிக்கையில் ஜனசங்கம் இதனை அறிவித்துள்ளது.

இந்தியாவை 100 ஜனபதங்களாகப் பிரிக்க பார்ப்பனிய - பனியா முதலாளிகளும் அவர்களுக்கு எடுபிடி வேலை செய்யும் மோடிக் கும்பலும் ஏன் அவசரப்படுகின்றனர்? இந்தியா என்பது பனியா முதலாளிகளும் பார்ப்பனிய அதிகார வர்க்கமும் பெற்றெடுத்த குழந்தையே. ஐரோப்பாவிலும் பிற நாடுகளிலும் தோன்றிய ஜனநாயகத்திற்கான இயக்கங்கள் பேரரசுகளை வீழ்த்தி மொழி வழியிலான தேசங்களைப் படைத்தன. அப்படியான திசை வழியில் இந்தியா நடைபோடுகிறது. தனித் தனியான இறையாண்மை கொண்ட மொழி வழி தேசங்கள் உருவாகுவதைத் தடுத்தாக வேண்டும் என ஆளும் உடைமை வர்க்கம் பதறுகிறது. தனித் தனியான இறையாண்மை கொண்ட மொழி வழி தேசங்கள் அமைந்து விட்டால் அது பெரும் பனியா முதலாளிகளின்

▼▼▼

***பார்ப்பனிய மேலாதிக்கம் கொண்ட சாதிய சமூக அமைப்பே ஜனபதம் ஆகும். அதில் மன்னன் கூட பார்ப் பனுக்கு கட்டுப்பாட்டவன். பார்ப்பனர்களே முழு அதிகாரத்தையும் கொண் டிருந்தனர். அப்பேர்ப்பட்ட ஜனபதத்தை இந்தியாவில் உருவாக்கும் நோக்கங் கொண்டு இந்தியா விலுள்ள 29 மொழி வழி மாநிலங் களை 100 ஜனபத மண்டலங்களாக பிரிக்க திட்டம் தீட்டியுள்ளனர்.***

▲▲▲

விரிவான சந்தையையும பார்ப்பனர்களின் மேலாதிக்க நலனையும் சிதைத்து விடும்.

தமிழீழத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரித்து சிங்களம் எப்படி ஒடுக்கியதோ அது போல இந்தியாவிலுள்ள மொழி வழி மாநிலங்களை மண்டலங்களாகப் பிரித்து ஒடுக்க, சிதைக்க பா.ஜ.க. திட்டம் போடுகிறது. ஜம்மு காஷ்மீரை இரண்டாகப் பிரித்ததைப் போல தமிழ்நாடு உரிமை பெறுவதைத் தடுக்க இரண் டாக மூன்றாகப் பிரித்து ஒடுக்கத் திட்டமிடுகின்றனர்.

தமிழ்நாடு தனி நாடாக மலர்ந்திருந்தால் பொருளாதார வளர்ச்சியில் ஐரோப்பாவை எட்டிப் பிடித்திருக்கும் என்று இந்தியாவிலுள்ள பொருளாதார அறிஞர் அமர்த்திய சென் கூறினார். வெள்ளையர்கள் வருவதற்கு முன் இந்தியா என்ற ஒரு நாடே வரலாற்றில் இல்லை. ஆனால் தமிழ்நாடு பழமையான செம்மொழியையும், பண்பாட்டையும் கொண்ட நீண்ட வரலாற்றைக் கொண்டது. இதன் தொன்மையைப் பாதுகாக்கப் போகிறோமா? தமிழ்நாடு என்ற ஒன்று இல்லாதொழிக்க வடநாட்டுப் பார்ப்பன - பனியா கும்பலின் சதித் திட்டத்திற்குப் பலியாகி தமிழ்நாட்டை மண்டலங்களாகப் பிரித்துத் தாயக உரிமையை இழக்கப் போகிறோமா? உறுதியாக இல்லை.

பாவேந்தர் நம்மை எச்சரித்தார்.

"நாற்புறத்து பகைவர் கூட்டம் -
நடுப்புறத்தே தமிழ்த் தாய்!
காப்பதற்குத் தமிழரெல்லாம் சேருங்கள்

# சங்கி என்பவர் யார்?

❑ ந.மணிமாறன்



**ச**ங்கி என்பவரை ஏதோ தீவிரவாதி அளவிற்கு அணுக வேண்டாம். உண்மையில் சங்கி என்பவர் பரிதாபத்திற்குரியவர். சுய சிந்தனை இல்லாதவர், தனக்கு வரும், Whats App, Face book செய்திகளை உளமார நம்பி பல குழுக்களுக்கு பகிர்பவர். அவருக்கு என்று தனிப்பட்ட திறமைகள் இல்லை என்பதை அவரே புரிந்து கொண்டுள்ளதால் தன்னைப் பற்றிய பெருமிதம் எதுவும் இல்லாமல் இருப்பவர். அதனால் தன் ஜாதியின் மூலமும், மதத்தின் மூலமும் பெருமிதத்தை அடைய லாம் என நம்பும் பரிதாபத்திற்குரியவர். தமிழ் இலக்கியங்களைவிட புராணங்களை உண்மை என்று நம்புபவர் அவர் களிடம் இந்து மதம் என்பதற்கான வரையறை என்ன? இந்து மதம் இந்துக்களுக்கு செய்த நன்மை என்ன? என்று கேட்டால் பேந்த பேந்த முழிப்பவர். தாய் மதத்திற்குத் திரும்புங்கள் என்பார்! எந்த சாதியில் கொண்டு சேர்ப்பீர்கள் என்று கேட் டால் 32 பற்களையும் காண்பிப்பவர்!

### புத்தகத்தை முழுமையாக படிக்காதவர்

சங்கி என்பவர் ஒரு புத்தகத் தினைக்கூட முழுமையாக வாசித் தறியாத அபலை. இந்திய நாடு என்பது இந்து மதத்தாலும், புராணங் களாலும் உருவானது என்று சொல்லி அகண்ட பாரதம் குறித்து உணர்ச்சி வசப்படுபவர். இராமாயணத்தில் தசரதன் 60,000 மனைவிகளின் மூலம் குழந்தை பெற்றுக் கொள் வதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று விஞ்ஞானிகள் மூலம் சொல்லவைத்ததுடன் அந்நிகழ்வு நடந்த இடம் கோசலை (உத்தரப் பிரதேசம்) நாட்டிலுள்ள அவாத் என்னுமிடம் என்பதையும் குறிப்பிட்டு சொல்லி ஆனந்தப் பெருக்கு அடைபவர். சங்கி என்பவர் அவரை இயக்கும் பாண்டே, மாரிதாஸ், ஸ்டான்லி, போன்ற ஒரு சிலரால் கட்டுப்படுத்தப்படு கிறார். அனைத்துப் பதில்களும், கேள்விகளும் இவரது மண்டைக்குள் அவர்களால் திணிக்கப் பட்டு உருவாக்கம் செய்யப்பட்டதே

### “ஜி” என்ற வடநாட்டு பண்பாடு


சங்கிகளுக்குள் சுற்றும் அனைத்துக் கேள்வி பதில்களும் அவர்களுக்குள் "ஈயடிச்சான் காப்பி" போல ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அதனால்தான் ஆயிரம் முறை தெளிவான பதில் கிடைத்தபின்னரும் கூட "ஈ.வெ.ரா. தன் கிழ வயதில் மணியம்மையைத் திருமணம் செய்தது ஏன்? என்று எங்கு போனாலும் அதிபயங்கரமாகக் கேட்டுக் கொண்டே இருப்பர். தனது கட்சிக்கரர்களின் வீட்டிற்கு சென்று ஜி’ இருக்கிறாரா என்று கேட்பர். ’என்னங்கஜி, வாங்க ஜி, உட்காருங்க ஜி’ என்று தனக்கே உரிய ஜி’ தமிழில் பேசி சிரிப்பையும் எரிச்சலையும் மூட்டுவர்.

கீழடி அகழ்வாராய்ச்சி நடக்கும்போது தோண்டத் தோண்ட ஏதாவது ஒரு இந் துத்துவ சிலையோ வேத புத்தகமோ, கிடைக்காதா என நம்பி நம்பி வெம்பி வெம்பித்

திரிபவர். குஜராத்தைவிட தமிழ்நாடு எல்லா விதங்களிலும் முன்னேறிய மாநிலம் என்ற உண்மை அவர் முகத்திலறைந்தபோதும் திராவிடத்தால் வீழ்ந்தோம் எனக் கூசாமல் யார் கேட்டாலும், கேட்காவிட்டாலும் பேசிக் கொண்டே இருப்பவர்.

தன் கைபட ஒரு அணுகுண்டை தன் பாக் கெட்டில் வைத்து எடுத்துச் சென்று பாகிஸ் தான்மீது போட்டு அந்நாடு பஸ்பமாவதை கண்டு ரசிக்க வேண்டும் என்பது சங்கியின் ஆழமன அவா. தன் சக முஸ்லீம்களின் முன்னோர்கள் பாபரின் படையில் இருந்து இங்கு வந்து செட்டிலானவர்கள், வந்தேறிகள் என்பது அவரது திண்ணமான எண்ணம். அந்த எண்ணத்தை அவ்வப்போது உருவேற்றிக் கொண்டே இருப்பர்.

உலகப் பொருளாதாரம், தொழில் நுட்பம், வான்வெளி ஆராய்ச்சி சாப்ட்வேர் நானோ, தொழில் நுட்பம் (software, Nano technology, Micro biology) மற்றும் எதிரி மீது எந்த நேரத்தில் போர் தொடுக்க வேண்டும் எந்த ஆயுதங் களைக் கொண்டு தாக்க வேண்டும் என்று இராணுவத் திற்கு அறிவுரை சொல்லும் ஞானம் பெற்றவராகவும், விஞ்ஞானியாகவும் தொலை நோக்கு சிந்தனை கொண்ட ஞானியாகவும் மோடி இருக் கிறார் என்பது சங்கிகளின் அசைக்க முடியாத நம்பிக்கை.



செயற்கை நுண்ணறிவு, பிளாக்செயின், லாட், எ.ஐ.ஆர்.பி.எ. (Artificial intelligence, Block chain, Lot, RPA) நுட்பங்களைப் பற்றி அந்தக் காலத்திலேயே ரிக் வேதத்தில் சொல்லப் பட்டிருந்தது என்பது போன்ற வாஸ்ட்ஆப் செய்திகளைப் பார்த்து பிறவிப் பயனை அடைகின்றனர். இத்தகைய சமயங்களில் இவர் தன்னை ஒரு தேசம் காக்கும் வீரனாகவும், **தான் இருக்கும் வாஸ்ட்ஆப் குழுக்களை போர்க்களமாகவும் கருதிக் கொண்டு படபடவென பலருக்கும் பார்வர்டு செய்து பரவசமடைவர்.** அப்படி பார்வர்டு செய்து கொண்டிருக்கும்போது மொபைல் hang ஆகி விட்டால் ஒருவேளை உள்ளூர் கம்யூனிஸ் டுகள் சீனக் கம்யூனிஸ்டுகளிடம் சொல்லி சீனர்களால்தான் தன் மொபைல் ஹேக் செய்யப்பட் டுள்ளதோ என்ற சந்தேகமும் அவருக்கு அடிக்கடி எழுவ துண்டு.

▼▼▼

***யஷ்வந்த்சின்ஹா ஒரு முறை கூறினார், "மோடி ஒருவருக்கு பைத்தியம் பிடித்திருந்தால் சமாளிக்கலாம்! நாட் டையே பைத்தியம் பிடிக்க வைத்துள் ளாரே" எப்படி சமாளிப்பது என்றார்!***

▲▲▲

### மனநிலை பாதிக்கப்பட்டவர்

பணவீக்கம், விலைவாசி உயர்வு, தொடரும் எரிபொருள் உயர்வு, வேலையின்மை, கருப்பு பண மீட்பு வாய்சவ டால், பண மதிப்பிழப்பு, GST அதனால் ஏற்பட்ட கேடு என்று எதனையும் அவர்களால் பேசமுடியாத நிலையில் உள்ள மகாபாவிகள்! மோடி எதைச் செய்தாலும் வரலாற்றுச் சாதனையாக, உலக அதிசயமாக அதனை நினைத்து சிறிது நேரம் மெய் மறந்து விடுவர். அவர் பேப்பரில் தேன் என்று எழுதிக் காண்பித்தால்கூட அதனை நக்கிப்பார்த்து ஆகா! இனிக்கிறது என்று சொல்லும் மன நிலை பாதிக்கப்பட்டவர்.

பெட்ரோல், டீசல் விலை ஏறினாலும் அதனையும் நியாயப்படுத்துவார். மோடி அதனைக் குறைத்தாலும் நியாயப்படுத்துவார் என்ற வகையில் நாம் என்ன பேசுகிறோம் என்று தெரியாமலே புலம்புவர். தமிழ்நாட்டின் இயற்கை கனிம வளங்கள் கொள்ளையடிக்கப் படுவதையும், காவிரியில் தமிழ் நாட்டு உரிமை மறுக்கப்படுவதையும், மத்திய அரசால் வரி வருவாயின் தமிழகப் பங்கைக் கொடுக்காமல் ஏமாற்றுவது குறித்தும், மாநில அரசுகளின்



உரிமைகள் நாளுக்கு நாள் பறிக்கப்பட்டு வருவதையும் உணர முடியாத நிலையில் கோமாவில் இருப்பவர். கோமாவிலிருந்து விடுபட்டதும் இது குறித்து மீண்டும் கேட்டால் கோயில் நிலங்கள் பிற மதத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகக் கதறுவர்.

இந்தியா பல மாநிலங்களைக் கொண்ட ஒன்றியம் துணைக்கண்டம், மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று இருப்பதுதான் ஜனநாயகம் என்று கூறினால் அது குறித்து விவாதிக்க முடியாத மன நிலையில், ஆன்ட்டி இந்தியன் (Anti Indian) பிரிவினைவாதி என்று மந்திரித்து விட்டவர் போல் பேசுபவர். நினைவு திரும்பியதும் மீண்டும் கேட்டால் ஆதி காலத்தில் இந்தியா 50 புராணத் தேசங்களைக் கொண்டிருந்தது என்பர். தருமபுர ஆதீனத்தை பல்லக்கில் தூக்கிச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்டித்து அலறுவார்,

## புத்தி பேதலித்த நிலை

இந்தியா விடுதலையடைந்து 75 ஆண்டு காலத்தில் பாடுபட்டு உருவாக்கப்பட்ட பொதுத் துறை நிறுனங்களையெல்லாம், அடிமாட்டு விலைக்கு அம்பானிக்கும் அதானிக்கும் மோடியால் விற்கப்படுவதையும் தொலைத்தொடர்பு நிறுவனமான BSNL-ஐயும் முடக்கி அழித்துக் கொண்டிருக்கிறதும்தான் தேசப்பற்றா என்று கேட்டால் 'சாமிக்கு முன் தண்ணீர் தெளித்து பலியிடுவதற்காக விடப் பட்ட ஆடு போல் மிரட்சியான நிலைக்குப் போய் பதிலளிக்காமல் நிற்பவர்'

## நிலை குலைந்து, கண்ணீர் சிந்தி

பொதுத்துறை நிறுவங்களை விற்றது, விலைவாசி உயர்வு, பணவீக்கம், வேலை யின்மை கொடுமை என்பதைத் தவிர மோடியின் 8 ஆண்டுகால சாதனை என்ன என்று கேட்டாலோ ஊர் சுற்ற 8500 கோடியில் தனக்கான தனி விமானத்தை வாங்கியது என்பது ஊதாரித்தனமிலையா? என்று கேட்டாலோ, காஷ்மீர் மக்களின் உரிமையைப் பறித்தது நியாயமா என்று கேட்டாலோ உடனே அவர்கள் படேலுக்கும், இராமானுஜ ருக்கும் பல்லாயிரம் கோடி செலவு செய்து சிலை வைத்தது, இராமருக்கு 1000 கோடியில் கோயில் கட்டியது உலகத்தரத்தில் நாடாளு மன்றக் கட்டிடம் கட்டப்படு வருவது, இராணுவ பலத்தைக் கூட்டியது, யோகாவை உலக அளவில் பிரபலப்படுத்தியது, சீனாவையும், பாகிஸ்தானையும் எல்லையில் வாலாட்டினால் நடப்பதே வேறு என்று பயமுறுத்தி அடங்கச் செய்தது. இதன் மூலம் இந்தியாவை வல்ல ரசாக்கி உலக அரங்கில் தலைநிமிரச் செய்தவர் மோடி என்று கூறி உணர்ச்சிப் பெருக்கால் நிலைகுலைந்து கண்ணீரைச் சாரை சாரையாய் வடிப்பவர். நிலை குலைவிலிருந்து விடு பட்டதும் 2030-இல் இந்தியா பொருளாதாரத்

தில் சீனாவை விஞ்சிவிடும் என்று பரசவப் பட்டு மீண்டும் சாரை சாரையாகக் கண்ணீர் வடிப்பவர்.

தனக்கு வேண்டாதவர்களின் வீடுகளில் ரெய்டு நடத்தி பல்லாயிரம்கோடி கருப்புப் பணம் கைப்பாற்றியதாக அறிவிக்க வேண் டியது பின்னர் அதன் மீதான நடவடிக்கை குறித்தோ, அந்த பணம் என்ன ஆனது என்பது குறித்தோ நீதிமன்றத்திற்கோ, மக்களுக்கோ தெரிவிக்காமல் அவர்களிடம் கட்சி நிதி பெற்றுக் கொண்டு விஞ்ஞான ஊழல் செய்கிறீர்களே, லாட்டரி மார்ட்டின் வீட்டில் ரெய்டு நடத்தி பின்னர் அதன் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க 100 கோடி கட்சி நிதி பெற்றுக்கொண்டு அவருக்கு எந்தவித டெண்டரும் விடாமல் கோவை-ஷீரடிக்கு இரயில் நடத்த அனுமதி கொடுத்துள்ளீர்களே, ஊழல் பேர்வழிகள், சமூக விரோதிகள், கொலை, கொள்ளைக்கார பேர்வழிகள் என்று அனை வரையும் எவ்வித பாகுபாடுமின்றி கட்சியில் சேர்த்துக்கொள்கிறீர்களே இதெல் லாம் அந்தக் கடவுளுக்கே அடுக்குமா? என்று கேட்டாலோ வலிப்பு நோய் வந்து வாய் ஒருபக்கமாக இழுத்துகொண்டு மூலையில் உட்கார்ந்து விடுபவர்.

சரி இதையெல்லாம் விடுங்கள்! உங் களுக்கு மதத்தைத் தவிர பிற வாழ்வா தாரங்கள் குறித்த சிக்கல்களைப் புரிந்து கொள்ளமுடியாத நிலை இருப்பதால் தமிழகத் திலும், வட இந்தியாவிலும் சாதி மறுப்புத் திருமணங்கள் செய்பவர்களை ஆணவப் படுகொலை செய்கிறார்களே திருமணம் செய்துகொண்டவர்கள் இருவரும் இந்துக்கள் தானே, இது குறித்து நீங்கள் எதுவும் சொல்வ



தில்லை, கண்டிப்பதில்லையே இதற்காவது சரியான நேர்மையான பதிலைச் சொல்லுங்கள் என்று கேட்டால் காக்கை வலிப்பு வந்தவன் போல் வாயில் நுரை தள்ள கீழே விழுந்து விடுபவர்.

**▼▼▼**

***அவர் பேப்பரில் தேன் என்று எழுதிக் காண்பித்தால்கூட அதனை நக்கிப்பார்த்து ஆகா! இனிக்கிறது என்று சொல்லும் மன நிலை பாதிக்கப்பட்டவர்.***

**▲▲▲**

### நாடே பைத்தியமானால்

- RSSஐ உருவக்கிய சித்பவன் பார்ப்பனர்கள் கூட யோசித்திருக்க மாட்டார்கள் தங்க ளுக்கு தசரதனைப்போல் 60,000 மனைவி மார்கள் கிடைத்து அவர்களின் மூலம் குழந்தைகளைப் பெற்றுத் தள்ளியிருந் தால்கூட இந்த அளவிற்கு மூளையற்ற சங்கிகள் கிடைப்பார்கள் என்று!
- இன்று குடியரசு தலைவருக்குப் போட்டி யிடும் யஷ்வந்த்சின்ஹா ஒரு முறை கூறினார், "மோடி ஒருவருக்குப் பைத்தியம் பிடித்திருந்தால் சமாளிக்கலாம்! நாட் டையே பைத்தியம் பிடிக்க வைத்துள் ளாரே" எப்படிச் சமாளிப்பது என்றார்!
- ஒருபார்ப்பான் சங்கியாக இருக்கிறான் என்றால் அதில் ஞாயம் இருக்கிறது! பார்ப்பன அல்லாதவன் சங்கியாக இருக் கிறான் என்றால் அதில் என்ன ஞாயம் இருக்கிறது?
- என்ன செய்வது சங்கிகள் மீது பரிதாபப் படுவதா? வெறுப்புக் கொள்வதா, கோபம் கொள்வதா? என்றே புரியவில்லை! நீங்களே ஒரு முடிவு சொல்லுங்கள்.

**சிறுகதை**

# தக்காளி

**பொ**ன்னமராவதி சந்தைக்கடை வெறிச் சோடிக் கிடந்தது. கடைத் திட்டுகளும், படுதா கட்டும் மூங்கில் கழிகளும் ஆங்காங்கே நின்றன.

மனிதர்கள் கழித்துப் போட்ட குப்பை கூலங்கள் சிதறிக்கிடந்தன. மளிகைக் கடை களின் பக்கம் சிதறிக்கிடந்த தானியங்களைப் பொறுக்கித் தின்ற புறாக்கள், கூட்டமாக சுதந்திரமாக சிறகடித்து பறந்தன.

நேற்று இந்நேரம் எல்லாம் சந்தை களை கட்டி இருந்தது. கடை விரித்தோரும் பொருள் கொள்வோரும் எழுப்பிய கலவையான குரல் களால் ஏரியாவே கலகலத்தது. சந்தைக்கடை இரைச்சலின் இடையே ஒரு மௌனத் தோற்றமாக அறுபது வயது மதிக்கத்தக்க பாட்டி ஒருத்தி, வெறும் கூடையை வைத்துக் கொண்டு நடந்து கொண்டிருந்தாள்.

அவளது கருத்த முகத்தில் கவலையின் இருள் அப்பியிருந்தது. பாதப் பிரதச் சனமாக மெல்ல நடந்து சென்றாள்.

ஒவ்வொரு கடையைக் கடக்கும்போதும் அந்தந்தக் கடைப் பொருட்களின் வெள் ளாமையால் ஏற்பட்ட நட்ட கஷ்ட புலம்பல் களும், புகார்களும் அவள் காதில் விழுந்து கொண்டே வந்தது.

வாழைத்தார் கடை கடந்தது.

அன்னைக்கு அடிச்ச சூறாவளி காத்துல வாழை பூராவும் சாஞ்சி போச்சு. நட்டஈடும் கிடைக்கல இன்சூரன்சும் கிடைக்கல.அது என்னமோ ஏரியா பூராவும் பாதிச்சிருக்கணு மாம்ல. மாப்பிள்ளை நம்ம காட்ட நாம தான் பாத்துக்கணும்.

அடுத்து வெங்காயக் கடை வந்தது. அதில் ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் ஒப்பாரி வைக்காத குறையாய் தன் பாட்டை பகிர்ந்து கொண்டிருந்தாள்.

போன சீசன்ல வெங்காயம் போட்டோம். எல்லாம் சாவியா போச்சு. போற போக்க பார்த்தா அவன் அவன் வீட்டிலேயே காய்கறிகளை வளத்து திங்கணும் போல. கவர்மெண்ட்டும் ரிலையன்ஸ் மாதிரி பெரிய முதலாளிகளுக்குத் தான் சலுகை காட்டுது.

மளிகைக் கடை பக்கம் வேறுமாதிரியான புலம்பலாக இருந்தது.

இந்தத் தடவை மக்காச்சோளம் போட்டேன். கம்பெனி விதையை நம்பி ஏமாந்து போயிட்டேன்பா. ஒரு காலத்துல விதையும் நம்ம கையில இருந்துச்சு. உரமும் நம்ம கையில இருந்துச்சு இப்ப அடுத்தவனை எதிர்பார்த்து கிடக்க வேண்டியதா இருக்கு.

பக்கத்தில் கலாசுக்காரர்கள் அரிசி மூட்டைகளை கொக்கி போட்டு வண்டியில்



ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த கொக்கியின் துளை வழியில் தானியங்கள் கீழே சிதறின. உழுதவன் கணக்குப் பார்த்தா உழக்கு கூட மிஞ்சாதும்பாங்க. இதனாலதான் நம்ம விவசாயிகள் டெல்லி வரைக்கும் போயி நெல்லை கொட்டி போராடுகிறாங்க.

அட இதுக்கெல்லாம் மாற்றா இயற்கை விவசாயம் பண்ணுங்கப்பா. நம்மாழ்வார் அய்யா போல பலபேரு சாதிச்சிக் காட்டி இருக்காங்களே

அட சொல்றாங்கப்பா... அதெல்லாம் எந்த அளவுக்கு சரிப்பட்டு வரும்னு தெரியலையே

அதுசரி, சொகுசாக வாழ்ந்து பழக்கப்பட்டாச்சு. உழைக்கிறதுக்கு மனசு வருமா?

டீக்கடையில் வடையும், பஜ்ஜியும் மென்றபடி ஒரு குழு காரசாரமாக விவாதித்துக் கொண்டே இருந்தது.

இதெல்லாம் அரசாங்கமாப் பார்த்து செய்ய வேண்டியதப்பா. நம்ம கையில என்ன இருக்கு

நம்ம கையில என்ன இருக்கா? உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன் கேளு. நெல்லு பயிறுல ஒத்த நாத்து நடவுன்னு நம்மாழ்வார் பத்து வருஷமா போராடினார். அதுக்கப்புறம் நிறைய பேரு செய்ய ஆரம்பித்ததும் கவர்மெண்ட், செம்மை நெல் சாகுபடின்னு கொண்டு வரலையா. மக்கள் ஒன்று சேர்ந்தா அரசாங்கம் பின்னால வந்து தான் ஆகணும்.

இதையெல்லாம் கவனித்தபடி அந்த மூதாட்டி களைப்போடு நடந்து கொண்டிருந்தாள்.

ஆங்காங்கே கட்டில்களில் பலகாரங்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தன அவற்றைப் பார்த்தபடி பசியோடு நடந்து சென்றாள். கண்களுக்கு விருந்தானது வாய்க்கு வாய்க்கவில்லை

செருப்பு கடைகளில் வித விதமான செருப்புகளைக் கூவி விற்றுக் கொண்டிருந்தார்கள். அவள் வெறும் காலோடு வெயிலில் நடந்து சென்றாள்.வெயிலுக்கு தொண்டை வறண்டு கிடந்தது. கரும்பு ஜூஸ் கடைகளும் சர்பத் கடைகளும் அவள் தாகத்தைக் குடித்தபடி கடந்து போயின.

கரும்புக் கடை கடந்தபோது அந்த வெள்ளாமையும் விருப்பமாக இல்லை.

டன்னுக்கு விலை கிடைக்கவில்லை என்று வெள்ளாமை இனிக்கவில்லையாம்.

மூதாட்டியின் நெற்றிச் சுருக்கத்தில் வியர்வையாறு, மெல்ல மெல்ல வழிந்தது. விவசாய கடன்களால் தற்கொலை செய்து கொண்ட தன் கணவனால் வெறுமையாகிப் போன நெற்றி, கைம்மையைப் பறைசாற்றியது.

ஒரு பூக்காரியை கடக்கும்போது, பெரிய பெரிய கடைக்கு போனா தின்னுட்டு அவன் கேட்கிற காசை குடுத்துட்டு வராங்க. நம்ம கிட்ட தான் அஞ்சுக்கும் பத்துக்கும் பேரம் பேசுறாங்க" என்று பூக்களைக் கோத்து முடிச்சுப் போட்டுகொண்டே சமூக அவலங்களை அவிழ்த்தாள்.

பாட்டி சில கடைகளைக் கடக்கும் போது அவளது பேரக்குழந்தைகள் நினைவுக்கு வந்தார்கள்.

கண்ணாடி, வளையல் பொட்டு கடைகள் கடக்கும்போது அவளது பேத்தியின் குரல் காதில் ஒலித்தது.

சந்தைக்குப் போய்ட்டு வரும்போது எனக்கு ரிப்பனும் வளையலும் வாங்கிட்டு வா பாட்டி.


அல்வா கடை நகர்ந்தபோது குட்டிப் பேரனின் குரல் ஒலித்தது.

எனக்கு அல்வா வாங்கிட்டு வா பாட்டி.

இப்பொழுது எதுவுமே வாங்க முடியாத கையறு நிலையில் பாட்டிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

தன் புடவை முந்தானையால் முகத்தைத் துடைத்தபடி நகர்ந்துகொண்டே இருந்தாள்.

காய்கறிக் கடைகளில் பக்கம் தக்காளியின் வரத்து அதிகரித்துக் கொண்டே இருந்தது. அதைப் பார்த்த பாட்டியின் கண்கள் அச்சத்தில் சிவந்து போனது.



**கல்வி என்பது ஒரு ஆயுதம், அதன் விளைவுகள் அதை யார் கையில் வைத்திருக்கின்றன, யாரை இலக்காகக் கொண்டுள்ளன என்பதைப் பொறுத்தது.**

**– ஜோசப் ஸ்டாலின்**

அடக்கடவுளே எங்கிருந்துதான் இப்படி மலைமலையா தக்காளி குவியுமோ என்று பாட்டிக்கு மிரட்சியால் ஒரு அயற்சி ஏற்பட்டது.

ஒருவன் வெங்காயம் போட்டால் அந்தப் பகுதி முழுக்க வெங்காயம் போடுவது. ஒருவன் தக்காளி போட்டால் எல்லோரும் அதையே போடுவது. இந்த ஒரு பயிர் சாகுபடியில் தான் விவசாயிகள் அழிந்தார்கள்.

பாட்டியின் அச்சத்திற்கும் தக்காளி தான் காரணம்.

தன் தோட்டத்து தக்காளியை சந்தையில் விற்று வர கூடையைச் சுமந்து கொண்டு மூன்று மைல் நடந்து வந்திருந்தாள்.

தக்காளி ரெண்டு ரூபா. ரெண்டு ரூபா. ரெண்டு ரூபா என்று கூவி விற்ற தக்காளியின் விலை, அவள் காதில் நாராசமாய் இறங்கியது. திராவகத்தின் மேல் நிற்பது போல் தவித்தாள்.

குவிந்திருந்த தக்காளி மலைகளுக் கிடையில் அவளது கூடைக்காய் எவ்வளவு காணும்? என்றாலும் கமிஷன்காரனிடம் விற்பதற்கு ரொம்ப போராடிப் போனாள்.

என்னம்மா நீ. இதப் போயி இம்புட்டு தூரம் சுமந்துகிட்டு வந்திருக்க . சுமை கூலிக்குக் கூட காட்டாதேம்மா. பஸ்சுக்கு காசு கொடுத்து விடுகிறேன். ஊரு போய்ச் சேரு.

அவளது தக்காளியை அள்ளிய அந்த வியாபாரியின் கைகளில் தங்க நிற செயின் போட்ட வாட்சும், தங்கத்தாலான மோதிரமும், பிரேஸ்லெட்டும் மினுமினுத்தது. அதன் பின்பு தான் சந்தையிடையே கூடை நிறைய கவலையோடு வலம் வந்தாள்.

ஒட்டுமொத்த சந்தை புலம்பலின் அவல ஓசை, எங்கோ விவசாயக் கொள்கைகளில் பிழை இருப்பதாக கூறிக் கொண்டே இருந்தது.

இப்பொழுது அவள் சுடுமணலில் வெறும் காலோடு நடப்பது கூட சுடவில்லை. கந்துவட்டிக்காரனின் சுடுசொற்கள், அவளது பேரப்பிள்ளைகளின் குரல்களுக்கு நடுவே ரீங்காரமிட்டுச் சுழன்றது.

வட்டிக்குப் பணம் வாங்கும் போது மட்டும் வக்கனையா வாங்குறீங்க. அதை ஒழுங்கா கட்டணும்னு கொஞ்சமாவது நெனப்பு இருக்கா? நீ எல்லாம் சோத்த தான திங்கிற.

சந்தைக்குப் போனா ரிப்பனும் வளையலும் வாங்கிட்டு வா பாட்டி

"எனக்கு சாப்பிடறதுக்கு அல்வா வாங்கிட்டு வா பாட்டி. திரும்பத் திரும்ப குரல்களின் சுழற்சியில் அவளுக்கு சந்தையே வேகமாக சுழன்றது போல் இருந்தது. கொஞ்ச நேரத்தில் அந்தக் கிறுகிறுப்பில் அப்படியே மயங்கி கீழே விழுந்தாள்.

யாரோ முகத்தில் தண்ணீர் தெளித்து பாட்டியை எழுப்பினார்கள்.

தட்டி எழுப்ப வேண்டியது இவர்களை மட் டுமல்ல அழிந்துகொண்டிருக்கும் வேளாண் மையையும் அதன் வேராய் இருக்கும் விவ சாயிகளையும் தான்.

மறுநாள் சந்தையில் நிறைய குப்பைக் கூலங்கள் இறைந்து கிடந்தன. மூட்டை தூக்கும் கூலிகளின் பயனாய் சிதறிக் கிடந்த தானியங்களை மேய்ந்தபடி பறந்தன புறாக்கள்.

**எழுத்தாளர், கவிஞர் து.சோ.பிரபாகர்**

**திருப்பூர்**

# அறிவிப்பு

*தமிழக மக்கள் இறையாண்மை இதழுக்கு வாசகர்கள் தோழமை ஆற்றல்கள் அளித்து வரும் ஆதரவுக்கு ஆசிரியர் குழு தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. வரும் இதழ்கள் இன்னும் புதிய பொலிவுடன் ஆழமான தரமான படைப்புகளுடன் வெளி வரவிருக்கிறது,*

*சிறந்த வரலாற்று தொடர்கள், அரசியல் பொருளாதாரம், சுற்றுச்சூழல் குறித்த ஆய்வுக் கட்டுரைகள், தமிழ் சினிமாவின் போக்குகள் மாறிவரும் கலை இலக்கியங்கள் போன்ற பண்பாடு தொடர்பான கட்டுரைகள் மற்றும் கேள்வி – பதில் பகுதிகள் என உங்கள் ஆதரவுடன் கலாபூர்வத் தன்மையுடன் புதிய உச்சங்களை தொடவிருக்கிறது.*

*இது நமது தமிழ் மக்களின் வாழ்வில் விடியலை கொண்டு வரவும் அவர்களின் வாழ்க்கை தரத்தையும் ஒற்றுமையையும் அரசில் அதிகாரத்தையும் பெறுவதற்கு அயராது சமரசமின்றி போராடும் இதழாகும். எந்த வணிக நோக்கங்களுமின்றி வெளிவரும் இதழுக்கு தங்களது ஆதரவும் தோழமையும் அடிப்படை ஆதாரமாகும்.*

*இவண்*

**ஆசிரியர் குழு**

❑ மகாராசன்

# மார்க்சிய இயங்கியலும் மனிதகுல விடுதலைக்கான ஸ்டாலின் பங்களிப்பும்

மனித சமூக அமைப்பானது அது தோன்றிய காலத்திலிருந்து இன்றைய காலம் வரையிலும் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களைக் கடந்து வந்திருக்கிறது. மேலும், ஒவ்வொரு கால கட்டத்திற்குத் தகுந்தாற் போன்ற உற்பத்தி முறைகளையும் - அவற்றுக்கான உற்பத்தி உறவுகளையும் அது கட்டமைத்துக்கொண்டே வந்திருக்கிறது. இத்தகைய சமூகக் கட்ட மைப்புகளுக்கு உடன்பட்டும் ஒத்திசைந்தும், மறுத்தும் மாறுபட்டது மான சிந்தனைப் போக்குகள் வெவ்வேறு தன்மைகளிலும் வடிவங்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருக் கின்றன. இவ்வாறான சிந்தனைப் போக்கு களின் ஊடா கவே இயற்கை -மனிதர் - சமூகம் குறித்த உலகக் கண் ணோட்டங்களும் முன் வைக்கப் பட்டுள்ளன.

இயற்கை-மனிதர்-சமூகம் குறித்த அந் தந்தக் காலத்திய உலகக் கண்ணோட்டச் சிந்தனைகளே அன்றைய காலத்து தத்துவங் களாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவ் வாறான தத்துவங்களைச் சமூக அறிவியல் அடிப்படை யில் பொருள்முதல்வாதம் எனவும் கருத்து முதல்வாதம் எனவும் வகைப் படுத்துவர்.

பொதுவாக, தத்துவங்கள் யாவும் உலகைப் புரிந்துகொள்வதற்கான வழிகாட்டுதல்களை அதனதன் நிலைப்பாட்டிலிருந்து விளக்கி நிற்கின்றன. சுருக்கமாகச் சொல்வதெனில், உலகில் தோன்றிய அனைத்து வகைத் தத்துவங்களும் உலகைப் பற்றிய - அதாவது, இயற்கை-மனிதர்-சமூகம் குறித்த விவரிப் புகளாகவும் விளக்கங்களாகவுமே அமைந் திருக்கின்றன மாறாக அவற்றை மாற்றி யமைப்பதற்கான வழிகாட்டுதல்களை எந்தத் தத்துவமும் முன்வைக்கவில்லை.

இந்நிலையில், கருத்து முதல்வாதத் தத்து வங்களிலிருந்தும் மற்ற பொருள் முதல்வாதத் தத்துவங்களிலிருந்தும் வேறுபட்டு நிற்பது மார்க்சியத் தத்துவம்தான்.

மார்க்சியத்தின் அடிப்படை, பொருள் முதல்வாதம்தான். எனினும், இதுவரையிலான பொருள்முதல்வாதத் தத்துவங்களில் உள்ள குறைபாடுகளைக் களைந்து, வளர்ச்சிய டைந்த சமூக அறிவியலாக இயங்கியல் பொருள் முதல்வாதத் தத்துவமாக மார்க்சியம் வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, உலகைப் புரிந்து கொள்வதற்கும்-அதை மாற்றியமைப்பதற்கும் வழி காட்டும் தத்து வமாக இருந்துகொண்டிருப்பது மார்க்சியத் தத்துவம் மட்டும்தான்.

### இயங்கியல் முறை

மார்க்சியமானது மற்ற தத்துவங்களைப் போல வறட்டுக் கோட்பாட்டைக் கொண்ட தல்ல; அது வளரும் அறிவியல். உலகில் புதிய நிலைமைகள் தோன்றும்போது அதைப் புரிந்து கொள்ளவும், புரட்சிகரமானதாக மாற்றியமைக் கவும் மார்க்சியம் வழிகாட்டுவதோடு அதுவும் வளர்ச்சியடைகிறது. இதுதான் மார்க்சியத்



**கட்சிக்குள்ளேயே இருந்த துரோகிகள், முதலாளித்துவ முகவர்களின் பலவகைப்பட்ட சந்தர்ப்பவாதங்களுக்கு எதிராகப் போராடி அவற்றையெல்லாம் முறியடித்து இரசிய சோசலிசத்தையும் மார்க்சிய லெனினியத்தையும் பாதுகாக்கும் அரணாகவும், அவற்றுக்குச் செயன்மை வடிவமும் கொடுத்தவர் ஸ்டாலின்தான்.**

தத்துவத்தின் இயங்கியல். அதாவது, காரல் மார்க்சு-ஏங்கெல்சு ஆகியோர் முன்மொழிந்த இயங்கியல் பொருள் முதல் வாதத் தத்துவம் தான் முழுமையான சமூக அறிவியல் கோட்பாடாக வளர்ச்சியடைந்திருக்கின்றது. சமூக வரலாற்றை முதன் முதலாக உற்பத்தி உறவுடன் தொடர்புபடுத்திச் சொன்னவர்கள் மார்க்சு ஏங்கெல்சு ஆவர். பின்தங்கிய - பிற்போக்கான அல்லது ஆளும் உடைமை வர்க்கத்திற்குச் சாதகமான உற்பத்தி உறவுகளைத் துடைத்தெறிந்து, முன்னேறிய அல்லது உழைக்கும் வர்க்க நலனுக்கான உற்பத்தி உறவுகளையும், அதற்கு ஒத் திசைந்த சமூக அமைப்பு, அவற்றுக்கான தத்துவம், கட்சி, செயன்மை போன்றவற்றின் தேவைகளையும் அறிவியல் அடிப்படையிலான கோட்பாடாக உருவாக்கி வலியுறுத்தி வழிகாட்டியவர்கள் மார்க்சு-ஏங்கெல்சு ஆவர். இவர்கள் முன்வைத்த கோட்பாடுதான் புரட்சிக்கு வழிகாட்டும் தத்துவமாக அமைந்திருந்தது / அமைந்திருக்கின்றது.

### புரட்சிக்கு தலைமை

உலகில் முதலாளித்துவம் ஏகாதிபத் தியமாக வளர்ச்சியடைந்த ஒரு புதிய நிலைமை தோன்றியபோது, அதை மார்க்சிய அடிப்படையில் விளக்கிப் புரட்சிக்கு வழி காட்டியதோடு நிகழ்த்தியும் காட்டியவர் இலெனின் ஆவார். இரசியாவில் பொதுவு டைமைக் கட்சியை நிறுவி, அக்கட்சியின் மூலமாக மக்களை ஒன்றுதிரட்டிப் புரட்சியை ஏற்படுத்தியவர் இலெனின். இலெனினால் தலைமை தாங்கி நடத்தப்பட்ட இரசிய சோசலிசப் புரட்சிதான் உலகின் பின்தங்கிய நாடுகளிலும் புரட்சியை உருவாக்குவதற்கான வழிகாட்டுதல்களைக் கொடுத்திருக்கிறது / கொடுக்கின்றது. இங்கு மார்க்சியமானது மார்க்சிய லெனினியமாக வளர்ச்சியடைந்தது.

மாபெரும் மக்கள் புரட்சியின் மூலம் உருவாக்கப்பட்ட இரசிய சோசலிசத்தை லெனினுக்குப்பின்பு பேணிப் பாதுகாத்தவர் ஜே.வி.ஸ்டாலின் ஆவார். லெனின் உருவாக்கிய இரசிய சோசலிசத்திற்கு எதிராக இருந்த ஏகாதிபத்தியவாதிகள், கட்சிக்குள்ளேயே இருந்த துரோகிகள், முதலாளித்துவ முகவர்களின் பலவகைப்பட்ட சந்தர்ப்பவாதங்களுக்கு எதிராகப் போராடி அவற்றையெல்லாம் முறியடித்து இரசிய சோசலிசத்தையும் மார்க்சிய லெனினியத்தையும் பாதுகாக்கும் அரணாகவும், அவற்றுக்குச் செயன்மை வடிவமும் கொடுத்தவர் ஸ்டாலின்தான்.

1950களிலிருந்து உலகில் சோசலிச நாடுகளில் முதலாளித்துவ நீட்சியும் அதற்கெதிரான போராட்டங்களும் தொடங்கியிருக்கின்றன. இரசியாவில் மார்க்சியத் திரிபுவாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றி முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டுவந்து சமூக ஏகாதிபத்தியமாகச் சீரழித்திருந்தார்கள். இத்தகைய நிலைமைகளை மார்க்சிய லெனினிய அடிப்படையில் புரிந்து விளக்கிப் புரட்சிக்கு வழிகாட்டியவர் மாவோ ஆவார்.

### மாவோவியம்

சோசலிச சமூக அமைப்பில் இருந்து கம்யூனிச சமூக அமைப்பிற்குச் செல்வதற்கான புரட்சிகரத் திசைவழியைச் சீனப் புரட்சியின் மூலம் ஏற்படுத்திக் காட்டியவர் மாவோ. அதாவது, சோசலிச நாடுகளில் முதலாளித்துவப் பாதையாளர்களுக்கு எதிராகவும், முதலாளித்துவ மீட்சிக்கு எதிராகவும் பாட்டாளி வர்க்கத்தைத் தயார்படுத்துவதாக மாவோவின் புரட்சிகர நடவடிக்கைகளும் சிந்தனைகளும் அமைந்திருந்தன/அமைந்தி ருக்கின்றன. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத் தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதன் மூலம் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டமைப்ப தற்கு மாவோவியம் வழிகாட்டுகின்றது. இங்கு, மார்க்சிய லெனினியமானது மார்க்சிய லெனி

னிய மாவோவியமாக வளர்ச்சியடைந்திருக்கின்றது. ஆக, மார்க்சு-ஏங்கெல்சு முன்வைத்ததை மட்டுமே மார்க்சியம் என்பதாகப் பொத்தாம் பொதுவாக வரையறுத்திட முடியாது. மார்க்சிய லெனினிய மாவோவியத்தின் மொத்தத் தொகுப்பையே மார்க்சியம் என வரையறுப்பதுதான் சமூக அறிவியல் கோட்பாட்டைச் சரியான முறையில் புரிந்து கொண்டதற்கான புரிந்து கொள்வதற்கான பொருளாகும்.

**மார்க்சியத்தின் எல்லை எது?**

மார்க்சு, ஏங்கெல்சு, லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோரின் ஒட்டு மொத்தச் சிந்தனைத் தொகுப்பே மார்க்சியத் தத்துவத்தின் முழுமையாகும். மார்க்சிய லெனினிய மாவோ வியத்தின் கூட்டுத் தொகுப்பே உலகின் புரட்சிகர நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் தத்துவமாக அமைந்திருக்கின்றது. ஆனால், மார்க்சியம் குறித்து எழுதவும் பேசவும் கூடிய அறிவுஜீவிகள், மார்க்சியம் என்பதின் எல் லையை மார்க்சு-ஏங்கெல்சு முன்மொழிந்தவற்றை மட்டும் வரையறுப்பதோடு நின்று கொள்கிறார்கள். மார்க்சு, ஏங்கெல்சு ஆகி யோரின் புரட்சிகரச் சிந்தனைகளோடு லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோரின் புரட்சிகரச் சிந்தனைகள் மார்க்சிய வளர்ச்சி நிலையாய் அமைந்திருப்பதைப் பார்க்கத் தவறுகிறார்கள்; பார்க்க மறுக்கிறார்கள். அதேவேளையில், மரபு மார்க்சியம், நவ மார்க்சியம், பண்பாட்டு மார்க்சியம் என்றெல்லாம் மார்க்சியத்தை வகைப்படுத்துகின்ற பேரில் மார்க்சியத்திற்கு மாறான திரிபுவாதங்களை முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள்

▼▼▼

***பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத் தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதன் மூலம் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டமைப்ப தற்கு மாவோவியம் வழிகாட்டுகின்றது.***

▲▲▲

**திரிவுவாதிகளின் மதிப்பீடுகள்**

காவுட்ஸ்கி, ட்ராட்ஸ்கி, அல்தூசர், அந்தோணியா கிராம்சி, ப்ராங்பர்ட்மார்க்சியர், ஹெபர் மார்க்சு... போன்றவர்கள் முன்வைத்துள்ள சிந்தனைகளையே மார்க்சியம் என அறிவுஜீவிகள் பலர் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் லெனின், ஸ்டாலின், மாவோ சிந்தனைகளை மார்க்சியம் என ஒத்துக்கொள்ள மறுப்பதோடு, அவர்களைப் பற்றிய தவறான மதிப்பீடுகளையே முன்வைத்துள்ளனர் / முன்வைக்கின்றனர். லெனின், ஸ்டாலின், மாவோ குறித்த மார்க்சியத் திரிபுவாதிகளின் மதிப்பீடுகள் யாவும் அவர்களைக் கொடூரமானவர்களாகவும் சர்வதிகாரிகளாகவுமே காட்டுகின்றன. உழைக்கும் பாட்டாளி வர்க்க சர்வதிகாரத்தின் பக்கம் நின்றவர்களை வெறுமனே சர்வதிகாரிகள் என முத்திரை குத்திக் கொச்சைப்படுத்துவதோடு, அவர்களைப் பற்றிய அவதூறுகளைப் பரப்பிவிடு வது முதலாளிய வர்க்கத்தின் சிந்தனை முறை. இச்சிந்தனைமுறை மார்க்சியத்தின் பேரால் இயங்கிக் கொண்டிருக்கும் சில பல அறிவுஜீவிகளிடமும் இருந்து கொண்டுதானிருக்கிறது. இத்தகைய அறிவுஜீவிகள் மார்க்சியத்தின் பக்கம் நிற்கிறோம் என்கிற பேரில் உழைக்கும் பாட்டாளி வர்க்க நலனுக்கு எதிராக இருந்து கொண்டிருக்கிறார்கள்; மார்க்சியத்தின் அடிப்படையே தெரிந்துகொள்ளாதவர்களாக இருக்கிறார்கள்.

**ஸ்டாலின் குறித்து தவறான மதிப்பீடுகள்**

சோசலிசப் புரட்சியை நிகழ்த்திக் காட்டிய வர்கள் லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோராவர். இவர்கள் மார்க்சியத்தின் பக்கம் நின் றார்கள்; பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை யில் புரட்சியின் பக்கம் நின்றார்கள். இதன் காரணமாகவே, ஏகாதிபத்தியச் சார்பாளர்கள், உடைமை வர்க்க முதலாளியச் சிந்தனை முகவர்கள், மார்க்சியத் திரிபுவாதிகள், மார்க்சிய இயக்கத் துரோகிகள் போன்றோர் லெனின், ஸ்டாலின், மாவோ பற்றிய தவறான மதிப்பீடுகளையும் அவதூறுகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். அதிலும் குறிப்பாக, ஸ்டாலின் மீதான அவதூறுகள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுப் பரப்பப்பட்டன. ஸ்டாலின் மீதான அவதூறுகள் யாவும் மார்க்சியத் திரிபுவாதி களால்-மார்க்சிய எதிராளிகளால் உருவாக்கப்பட்டவை. உண்மையில், ஸ்டாலின் மார்க்சியத்தின் பக்கமே நின்றிருக்கிறார். அதாவது, ஸ்டாலினின் புரட்சிகர நடவடிக்கைகளும் சிந்தனைகளும் மார்க்சியத்திற்கும் சோசலிச சமூக அமைப்பிற்கும் பெரும் பங்களிப்பாக அமைந்திருந்தன என்பதைப் புரட்சிகர வரலாறு பதிவு செய்திருக்கிறது.

**(தொடரும்)**

# கறிவேப்பிலைகள்!

❑ திருநம்பி



இடம்: ராமநாதபுரம் மாவட்டம், உச்சிபுளி கிராமத்தில் மூன்று நாட்களுக்கு முன்னதாக ஒரு வீட்டில் பெரியசாமி (70), அவரது மனைவி புஷ்பவள்ளி (60) இருவரும் கருகிக்கிடந்ததாக செய்திகள் வெளியாகின. செய்தி நாளேடுகளில் செய்தியாக வந்ததன் பின்னணியில் ஒரு சோகமான வரலாறு பொதிந்துள்ளது யாருக்கும் தெரியாது.

### அவமானம் என்னும் ஆயுதம்

அவர்களுக்கு இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள். அவர்கள் அனைவரையும் படிக்க வைத்து திருமணமும் செய்து வைத்து விட்டார். அவருக்கு பராலிட்டிக் ஸ்ட்ரோக் எனப்படும் முடக்குவாதம் வந்துவிட்டது. இனி எந்த வேலையும் செய்ய முடியாத நிலை. புஷ்பவள்ளிக்கோ சொரியாசிஸ் எனப்படும் தோல் வியாதி. மூத்த மகன் வெளிநாடு சென்று விட்டார். மருமகளோ இருவரையும் மதிக்கவே மாட்டார். இன்னொரு மகனைச் சார்ந்து வாழ வேண்டிய நிலை. அவரது வீட்டில் தொடர்ந்து அவமதிக்கப்பட்டனர். அப்படிச் செய்தால்தான் இவர்களாக வெளியேறு வார்கள் என்ற தந்திரத்தை மகன் வீட்டார் கடைப்பிடித்தனர்.

சொரியாசிசைக் காரணம் காட்டி அவரைக் காணத் தகாதவராக நடத்தியது போன்ற எண்ணற்ற அவமரியாதைகள் நடந்தன. இதனால் மனம் நொந்து அவர்கள் இருவரும் ஒரு முறை விஷமருந்தித் தற்கொலைக்கு முயன்றார்கள். ஆனால், அண்டை வீட்டார்கள் காப்பாற்றிவிட்டார்கள். ஆனால் 3 நாட்களுக்கு முன்னதாக வீட்டில் யாரும் இல்லாததால் தங்கள் மேல் தாங்களே மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு தீக்குளித்துவிட்டனர். கருகிய நிலையில் கணவரின் காலைப் பிடித்துக்கொண்டு புஷ்பவள்ளி கிடந்த காட்சி யாரையும் கலங்க வைத்துவிடும்.

### துரத்தி அடித்த அலட்சியம்

இன்னொரு சம்பவம். இது நடந்த இடம் நாகப்பட்டினம், வெளிப்பாளையம் நாராயண னுக்கு 65 வயதாகிறது. ஆச்சாரமான குடும்பம். எளிமையான கீழ் நடுத்தர வர்க்க வாழ்க்கை. வக்கீல் குமாஸ்தாவாக இருந்த அவர் மிகுந்த சிரமப்பட்டு தனது ஒரே மகனைக் கணிப்பொறி பட்டதாரி ஆக்கினார். மகன் பள்ளியில் படிக்கும்போதே மனைவி இறந்துவிட்டார். அவருடைய உலகமே மகனாக இருந்தது. மகனுக்குப் பெரிய ஐடி கம்பெனியில் வேலை கிடைத்தது. அவனுக்கு மனைவியானவர் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். அதிலிருந்தே பிரச்சினைகள் ஆரம்பமாகின. ஒரு வாரத்திலேயே உணவு அளிப்பதில் பாகுபாடு ஆரம்பித்தது. காலை உணவே 10 மணிக்கு மேல்தான் அவருக்கு அளிக்கப்படும். ஆறிப்போன பிய்ந்துபோன உதிரி இட்லிகள். சில சமயம் அதுவும் கிடைக்காது. அதுவும் அந்தத் தட்டு வைக்கப்படும் தொனியிலேயே அவர் அலட்சியப்படுத்தப்படுவதை உணர் வார்.

ஒரு முறை பசி பொறுக்க மாட்டாமல் சீக்கிரமே காலை உணவு கேட்டுள்ளார். அதுவும் 9 மணிக்குத்தான். மறுநாளே அவ ருடைய பையன் அவரிடம் பேசினான்; அப்பா இனிமேல் இங்கு வர வேண்டாம் என்றான்.

ஏன் என்று கேட்கிறார். இனிமேல் உன்னிடம் மரியாதையாகப் பேச முடியாது என்று கூறி விடுகிறான். இதைக் கேட்டு மனம் நொந்தவர் எதுவும் பேசவில்லை.

சில நாட்களிலேயே அவர் கடலிலிருந்து மீனவர்களால் பிணமாக மீட்கப்பட்டார். தாங்கள் கத்திக் கூப்பாடு போட்டு அவரைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே அவர் கடலில் இறங்கியதாக அவர்கள் தெரிவித்தனர்.

### அமிலச் சொற்கள்

போய்த் தொலைய மாட்டேங்குது, சும்மா இருக்க மாட்டியா, பெருசு, சும்மாதானே இருக் கீங்க, இந்தக் கடைக்கு போய்ட்டு வாங்க, போன் பில்கூட நாங்கதான் கட்டணுமா, நீங்க என்ன செய்றீங்க

இதெல்லாம் மகன்களை யும் மகள்களையும் அரும் பாடுபட்டு வளர்த்த பெற் றோர்கள் முதியோர்களான பிறகு எதிர்கொள்ளும் அவமரி யாதைகள், உதாசீனங்கள்.

பல குடும்பங்களில் வேலைக்காரர்களுக்குப் பதிலாகப் பெற்றோர்கள் இருப் பார்கள், சம்பளம் வாங்காத குழந்தை வளர்ப்புக்கான ஆயாக்களாக இருப்பார்கள், வீட்டைப் பார்த்துக் கொள் ளும் வாட்ச்மேன்களாக வீட் டைக் காப்பார்கள்.

### முதுமையில் கொடுமை

இதுதான் முதியோர்களின் நிலைமை. பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடனே அவர்களின் நரக வாழ்வு தொடங்கி விடுகிறது. ஏற்கனவே பணியிலி ருந்து ஓய்வு பெற்ற வுடனே ஏற்படும் மன அழுத்தம், சமூக அங்கீகார இழப்பு ஆகியவற் றுடன் குடும்பத் திற்குள் மகன்களைச் சார்ந்து வாழ்வதிலிருந்து அலட்சியப்படுத்துதல் தொடங்குகிறது. பல குடும்பங்களில் மருத் துவச் செலவுகளுக்குக் கூட பெற்றோருக்குப் பணம் அளிப்பதில்லை. பணம் கேட்டால் உனக் குச் சாப்பாடு போடுவதே பெரிய விஷயம், இது வேறயா என்று திட்டுவார்களோ என்று அஞ்சும் முதியோர்களைச் சாதாரணமாகப் பார்க்கலாம்.

வசதியானவர்களாக இருந்தால் பெற்றோர் களை முதியோர் இல்லங்களில் சேர்த்து விடு வார்கள். பிறந்து வளர்ந்த இடத்திலிருந்து சொந்தபந்தங்களிலிருந்தும் வேரோடு பிடுங்கி அனாதைகளாக முதியோர் இல்லங்களில் வைக்கப்படுகிறார்கள். வசதியற்றவர் களாக இருந்தால் அவமானங்களைப் பொறுக்க முடியாமல் போகும்போதும் மகனே தங்களைச் சுமையாகக் கருதும்போதும் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

▼▼▼

***நிலப்பிரபுத்துவ சமூகத்தின் தன்மைகளான போலியான வம்ச கௌரவம், குலப்பெருமை, தனி மனித வழிபாடு, இவற்றுடன் பிரிக்க முடியாத அம்சமாகவே தயாள குணம் இருந்தது.***

▲▲▲

### மனித உரிமை மீறல்கள்

ஏஜ்வெல் பவுண்டேஷன் என்ற ஐநாவின் அங்கீகாரம் பெற்ற தொண்டு நிறுவனம் இந்தியாவில் முதியோர் குறித்த ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. இந்த ஆய்வில், இந்தியாவில் ஏறத்தாழ ஒரு கோடிப் பே முதியோர்கள். இது 2025இல் 324 மில்லியனாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் 65 விழுக் காடு முதியோர் ஏழைகள். அவர்களுக்கு எந்த வருமானமும் கிடையாது. 35 விழுக்காடு முதி யோருக்குச் சொத்துகள், முதலீடுகள், சேமிப் புகள், பணம் ஆகிய வசதிகள் உள்ளன. மீதிப் பேருக்கு அதெல்லாம் இல்லை. அத் தகைய ஏழை முதியோர்களின் நிலைதான் மிகவும் மோசம்.

ஆனால், முதியோரின் பொருளாதார அந்தஸ்து எப்படி இருந்தாலும் பெரும் பாலான முதியோர்கள் முறை கேடா கவே நடத்தப்படுகிறார்கள். முதியோர் எதிர் கொள்ளும் மனித உரிமை களாக ஆய்வில் தெரிய வந்தவை;-

உணவு, மருத்துவப் பரா மரிப்பு, மருந்துகள் ஆகிய அடிப்படைத் தேவைகளை மறுப்பது போன்றவற்றை 13 விழுக்காடு முதியவர்கள் எதிர் கொள்கின்றனர். உடல் மீதான வன்முறை (அவர்களை அடித்து உதைப்பது), பேரக் குழந்தைகள், வெளி நபர்கள், நண்பர்கள், உறவினர்கள், அண்டை வீட்டார் என யாரையும் சந்திக்க விடாமல் தடுப்பது, சில சமயங்களில் கட்டிப் போட்டு வைப்பது, வீட்டு வேலை களைச் செய்யக் கட்டாயப்படுத்துவது, அவர் களின் உணர்வுகளை வைத்து பிளாக்மெயில் செய்வது, அவர்களின் அன்றாடத் தேவை களான தூய்மையான குடிநீர், நல்ல உணவு ஆகியவற்றை மறுப்பது, அவர்களின் உடை மைகளையும் சேமிப்புகளையும், பத்திரங்கள் போன்ற சட்ட ஆவணங்களையும் பறித்துக் கொள்ளுதல் போன்ற மனித உரிமை மீறல் களை 37 விழுக்காடு முதியோர்கள் எதிர் கொள் கின்றனர். 13 விழுக்காடு முதியோர்கள் அன் றாடம் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

### விதவைகளின் நிலை

இதில் பெண்கள் படும்பாடு இன்னும் மோசமானது. பாலியல் பாகுபாட்டுடன் அடிக் கப்படுவதும் சாதாரண மாக நடைபெறுகிறது. அவர்கள் நான்கு சுவர்களுக் குள் அவமானங் களுடன் அனைத்தையும் தாங்கிக் கொண்டு பொறுமையாகவும் அளவற்ற சகிப்புத் தன்மை யுடனும் வாழ்க்கையின் கடைசிக் காலத்தைக் கழிக்க வேண்டும். விதவைகளாக இருந்தால் நரக வாழ்வுதான் காத்திருக்கும்.

### சமூக மாற்றங்கள்

இந்த நிலை ஏற்படுவதற்கான சமூக மாற்றங்கள் புரிந்துகொள்ளக்கூடியவையே. நாடு சுதந்திரமடைந்ததில் அரசியல் அதிகாரம் தான் மாறியதே தவிர சமூக மாற்றங்கள் பெரிதாக நடைபெறவில்லை. சாதி, பெண்ண டிமைத்தனம், மூட நம்பிக்கைகள், கிராமங்கள் தோறும் நிலவிய பிரபுத்துவம், அதன் எல்லை யற்ற அதிகாரங்கள் ஆகியவை அப்படியே நீடித்தன. நிலப்பிரபுத்துவ அமைப்பின் ஒரு பகுதியாகவே கூட்டுக் குடும்ப அமைப்பும் இருந்தது. கூட்டுக் குடும்ப அமைப்பில் சுதந்திர மின்மை, அந்தரங்கமின்மை போன்ற எதிர் மறை அம்சங்கள் இருந்தாலும் அக்குடும்ப அமைப்பில் மனிதாபிமான உணர்வுகள் இல்லாமல் இல்லை.

நிலப்பிரபுத்துவ சமூகத் தின் தன்மைகளான போலியான வம்ச கௌரவம், குலப்பெருமை, தனி மனித வழிபாடு, இவற்றுடன் பிரிக்க முடியாத அம்சமாகவே தயாள குணம் இருந்தது. மன்னர் களும் பிரபுக்களும் அந்தச் சமூகத்தின் குடும்பங்களும் தங்களது பெரு மைக்காக ஊதாரித்தனமான தயாளத்தைக் கடைப்பிடிக்கத் தயங்குவதில்லை. அந்தத் தயாளமே சமூகத்தில் முதியோர் களையும் ஆதரவற்றவர்களையும் காப்பாற்றி வந்தது.

கூட்டுக் குடும்பம் என்னும் அமைப்பு முதியோர்களைக் கைவிட வில்லை. அவர்கள் படுத்த படுக்கையிலிருந்தாலும் வைத்துப் பரா மரித்தது. அது மட்டுமின்றி விதவைகள், மன நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள் ஆகியவர் களையும் கைவிடாமல் அது ஆதரவளித்தது.



ஆனால் மூலதனத்தின் வீச்சால் கூட்டுக் குடும்ப அமைப்பு மட்டுமல்ல, அனைத்துச் சமூக அமைப்புகளும் சிதையத் தொடங்கின. இந்தி யாவில் ஐரோப்பிய நாடுகளைப் போன்று புரட்சியின் மூலம் நிலப்பிரபுத்துவச் சமூகம் ஒழிக்கப்பட்டு நவீன முதலாளித்துவச் சமூகம் உருவாக்கப்பட வில்லை. இங்கு பிரஷ்யன் ஜங்கர் பாணியில் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையையும் சமூகத்தையும் மாற்ற முயற் சிகள் நடந்தன, நடந்து கொண்டிருக்கின்றன. பிரஷ் யன் ஜங்கர் பாணி என்றால் நிலவு டைமைச் சமூகத்தை அடியோடு புரட்சியின் மூலம் மாற் றாமல் அந்தச் சமூகத்தின் தோள்மீது கை போட்டு சமரச முறையில் மெதுமெதுவாக மாற்றும் முறையாகும். இப்படிப் பட்ட சமரச முறையில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியாவில் நிலவிவந்த நிலவுடைமை சமூகத்தை மாற்றுவது என்பது விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்புத் தொழில் பிரி வினருக்கும் கொடிய வேதனை அளிப்பதாகும்.

விவசாயிகள் விவசா யத்தை மேற்கொள்ள முடியாமல் தூக்கி எறியப்பட்டனர். சமூக அமைப் புகளும் உறவுகளும் சிதையத் தொடங்கின. அதுதான் கூட்டுக் குடும்ப அமைப்பிலும் நடந்தது. பணிக்காகப் பல நகரங்களுக்கும் நாடுகளுக்கும் செல்ல வேண்டிய நிலை. அதனால் பெற்றோர்களைக் கூட்டிச் செல்ல முடியாத நிலை. அவர்களை விட்டும் செல்ல முடியாது. இதேபோல் மாற்றுத் திறனாளிகள், மனநோயாளிகள் உள்ளிட்ட நிர்க்கதியாக விடப்பட்டவர்கள் பலர் எண்ணற்ற துயரங்களை எதிர்கொண்டனர். பலர் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். தற்கொலைகளும் பட்டினிச் சாவுகளும் அதிகரித்தன. இந்த அவலம்தான் முதலாளித்துவம் ஏற்படுத்திய மாபெரும் மனித குலத் துயரமாகும். இந்தப் பின்னணி தான் முதியோர்களைப் பயன்படுத்திக் கொண்டு தூக்கி எறியும் நிலையை உரு வாக்கியுள்ளது.

நுகர்வுக் கலாச்சாரமும் ஆடம்பரக் கலாச் சாரமும் உலகமயமாக்கல் கொள்கைகளும் அமல்படுத்தப்பட்ட கடந்த 30 ஆண்டுகளில் இந்தப் போக்கு அதிகரித்துள்ளது. முதியோர்கள் தேவையற்றவாகளாகிப் போனார்கள். இளைய தலைமுறையினர் அவர்களைப் புரிந்து கொள் ளத் தயாராக இல்லை. முதியோர்களால் புரிந்து கொள்ள முடியாத தகவல் தொழில் நுட்பமும் இந்த இடை வெளியை அதிகப்படுத்தியது.

❑ அழகு

# மன நலமும் முதலாளியமும்

90களுக்கு முந்தைய உலகம் போன்று இப்போது இல்லை. இன்றைய உலகம் மிகவும் போட்டி மிகுந்ததாகவும், கடுமையான நெருக்கடிகளைக் கொண்டதாகவும் மாறியுள் ளது. அன்றைய உலகத்தில் இருப்பதைக் கொண்டு நிறைவடைபவர்களாக நமது தந்தையரும் முன்னோரும் வாழ்ந்தனர். அடைய முடியாத இலக்குகள் அவர்களுக்கு ஏதுமில்லை. பேராசைகளும் இல்லை. அதனால் ஒப்பீட்டளவில் நடுத்தர வர்க்கத்தின் வாழ்க்கையில் அமைதி நிலவியது.

### ஆடம்பர வாழ்க்கை

உலகமயமாக்கல் கொள்கைகள் அமல்படுத் தப்பட்ட பின்னர் அனைவரும் பணம் ஈட்டு வதற்கான கடுமையான போட்டியாளர்களாக வும் மாறினர். புதிய நுகர்வுப் பொருட்களை வாங்கிக் குவிக்கும் ஆசைகள் ஆக்கிரமித்தன. அடைய முடியாத இலக்குகளை வைத்துக் கொண்டு பொருள் தேடும் அவசர வாழ்க் கையைக் கைக்கொண்டார்கள். எதிர்காலம் குறித்த கனவுகள், மாபெரும் எதிர்பார்ப்புகள், அதே சமயத்தில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவே போராட வேண்டியுள்ள வாழ்க்கை ஆகியவற்றில் ஏற்படும் முரண் பாடுகள் ஏராளமான மனச்சிக்கல்களையும் உளவியல் வதைகளையும் உருவாக்கி யுள்ளன. சாதாரணப் பதற்றத்தில் தொடங்கி



பெரிய மன நோய்களான மனச்சிதைவு, ஆளு மைச் சிதைவு நோய்கள் எனப் பல மன நலப் பிரச்சினைகள் மக்களைப் பாதித்து வருகின்றன.

### ஆண்டுதோறும் எட்டு லட்சம் தற்கொலைகள்

உலக சுகாதார அமைப்பின் மதிப்பீட்டின் படி, உலகம் முழுவதும் ஆண்டுதோறும் 300 மில்லியன் மக்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். 23 மில்லியன் மக்கள் மனச்சிதைவு நோயாளிகளாகி வருகின் றனர். **எட்டு லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர்.**

வளர்ச்சி அடைந்த நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ள மக்களின் வாழ்நாள் குறைப்பில் இதயநோய்களுக்கு அடுத்தபடியாக மனநோய்களுக்கு முக்கியப் பங்கு உள்ளன. ஐரோப்பிய ஒன்றிய நாடு களில் உள்ள மக்களில் 18இல் இருந்து 65 வயது வரை உள்ளவர்களில் 27 விழுக்காட்டினர் மன நலத்துடன் இல்லை. 2014இல் இருந்தே உலக மக்களில் 16 வயதுக்கு மேற்பட்டவர்களில் 17.5 விழுக்காட்டினர் மன அழுத்தம் அல்லது பதற் றத்தினால் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். இவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

### 13 விழுக்காடு மனநோயாளிகள்

இந்தியாவைப் பொறுத்தவரை சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி மொத்த மக்கள் தொகையில் 13 விழுக்காட்டினர் ஏதோ ஒரு வகை மனநோயால் பாதிக்கப்பட்டுள் ளனர். இதில் 10 விழுக்காட்டினர் பதற்றம், மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மீதியுள்ளோர் மனச்சிதைவு, மது முதலான போதைப் பொருட்களுக்கு அடிமையாவது போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப் பட்ட நிலையில், மனித உரிமைகளும் மனித



கண்ணியமும் மதிக்கப்படும் சமத்துவ சமுதாயத்தில் மன நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் குறைவு. எந்த ஒடுக்குமுறையும், பாகுபாடும் கடைப்பிடிக்கப்படாத சமூகத்தில் மனநலம் பூரணமாகச் சாத்தியப்படுவதற்கு வாய்ப்புண்டு எனப் பெரும்பாலான மனநோய் மருத்துவர்களும் உளவியலாளர்களும் சமூகவியலாளர்களும் கல்வியாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். இந்தப் புரிதலானது ஒரு நீண்ட வரலாற்றுக்குப் பின்னர்தான் ஏற்பட்டது. அதன் மிகச் சுருக்கமான வரலாற்றைப் பார்ப்போம்.

மனநோய்கள் சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பினால் உருவாகின்றன என்ற விழிப்புணர்வு 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் உருவானது. அதற்கு முந்தைய காலம் வரை வளர்ச்சி அடைந்த நாடுகளில் மனநோய்களை உயிரியல் ரீதியான காரணங்களே தீர்மானிப்பதாகக் கருதப்பட்டது. மூளையிலுள்ள ரசாயனங்களின் சமனற்ற நிலை, செய்திகளைப் பரிமாறும் நியூரோடிரான்சிமிட்டர்கள் எனப்படும் நரம்புக் கோளாறுகள் போன்றவைதான் மனநோய்களை உருவாக்குவதாக அன்றைய கால கட்டத்தில் கருதப்பட்டது.

பின்னர் சிக்மண்ட் பிராய்டு இச்சிந்தனைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார். பாலியல் சார்ந்த உளவியல் வளர்ச்சி என்ற கோட்பாட்டின் மூலம் நிறைவேறாத இச்சைகளும் பாலியல் உந்துதல்களும் மன நோய்களுக்கான காரணங்களில் அடங்குகின்றன என்று அவர் நிறுவினார். அதற்காக உளவியல் பகுப்பாய்வு என்ற புதிய முறையை உருவாக்கினார்.

▼▼▼

***அவர் சக்கையாகப் பிழியப்பட்டு எந்திரமாக மாறிவிடுவதால் அவருடைய உழைப்பும் அது உருவாக்கிய உற்பத்திப் பொருளும் சரக்காகி அவரிடமிருந்த பிரிக்கப்பட்டு அந்நியமாகி விடுகிறது.***

▲▲▲

### உளவியல் பகுப்பாய்வு முறை

மன அமைப்பை முன் வைத்து இட் எனப்படும் இச்சை கொள்ளும் அமைப்பு, தன்முனைப்பு எனப்படும் ஈகோ எனப்படும் அமைப்பு, பொறுப்புகளை ஒழுக்க விழுமியங்களுடன் மனிதனுக்குச் சுட்டிக்காட்டும் சூப்பர் ஈகோ என்று மூன்றாகப் பகுத்துக் காட்டினார் சிக்மண்ட் ஃப்ராய்ட். இந்த மூன்று அமைப்புகளுக்குள் ஏற்படும் முரண்பாடுகளே மனநோய்களுக்குக் காரணம் என்று உளவியல் பகுப்பாய்வு முறைக் கோட்பாடு கூறியது.


ஃப்ராய்டின் ஆய்வுகள் உளவியல் துறையில் புதிய வெளிச்சங்களைக் காட்டினாலும் சமூக, பொருளாதார அரசியல் காரணிகளைக் காட்டாமல் தனிநபர் சார்ந்தே இருந்தன. இதன் போதாமையைச் சுட்டிக்காட்டிய எரிக் ஃப்ராம் சமூக அரசியல் பொருளாதார அமைப்பு முறையே குறிப்பாக முதலாளிய உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்ட சமூகமே மனநலத்தைப் பாதிக்கிறது என்று குறிப்பிட் டார். அவரின் ஆய்வு முறையானது மார்க்ஸின் அந்நியமாதலை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

### அந்நியமாதல் என்றால் என்ன?

முதலாளிய உற்பத்தி முறையை ஆழமாக ஆய்வு செய்த மார்க்ஸ் மனிதர்களின் அந்நிய மாதல் பிரச்சினையை விரிவாக எடுத்து ரைத்தார்.

மனிதனின் சாரமே அவனுடைய உழைப்பும் அதில் வெளிப்படும் ஆக்கபூர்வத்தன்மையும்தான். அவன் தன்னைப் பரிபூரணமாக வெளிப்படுத்திக்கொள்வது தனது உழைப்பின் மூலமாகத்தான். ஆக்கபூர்வத் தன்மையை அழகியலாக வெளிப்படுத்தி ஒரு பொருளை உருவாக்குவதுதான்.

முதலாளிய சமூகத்துக்கு முந்தைய சமூகத்தில் ஒரு படைப்பை அல்லது ஒரு பொருளை முழுமையாக அவ னால் உருவாக்க



முடிந்தது. உதாரணமாக கலையம்சத் துடன் கூடிய நாற்காலியை ஒரு தச்சரே உருவாக்கினார். ஆனால், முதலாளிய உற்பத்தி முறையில் தொழில்நுட்ப வேலைப் பிரிவினை யானது ஒரே பொருளைப் பல நாடுகளில் உற்பத்தி செய்வதாக மாற்றியது. உதாரணமாக ஒரு காலணியின் ஒரு பட்டனை மட்டுமே இந்தியா தயாரிப்பதாக வைத்துக்கொள்வோம். பட்டனை மட்டும் உற்பத்தி செய்பவராகத் தொழிலாளி மாறுகிறார். சார்லி சாப்ளின் மாடர்ன் டைம்ஸ் திரைப்படத்தில் இதை அழகாகக் காட்டியிருப்பார். அவர் ஒரு ஆணியை இறுக்கும் வேலையை மட்டும் செய்வார். அதையும் எந்திரத்தனமாகச் செய்வார். ஒரு கட்டத்தில் அவர் அந்த எந்திரத்தின் ஒரு பகுதியாக மாறிவிடுவார். இவ்வகையான தொழில்நுட்ப வேலைப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட முதலாளிய உற்பத்தியில் அவருக்கு எந்த திறமையும் வளராது. அவர் சக்கையாகப் பிழியப்பட்டு எந்திரமாக மாறிவிடுவதால் அவருடைய உழைப்பும் அது உருவாக்கிய உற்பத்திப் பொருளும் சரக்காகி அவரிடமி ருந்த பிரிக்கப்பட்டு அந்நியமாகி விடுகிறது.

### எந்திரமாக மாறும் தொழிலாளர்

ஒரு பொருளைத் தயாரிக்கும் 1,000 நபர்களில் ஒருவராக இருப்பதால் உழைப்பிலிருந்து அவருடைய கலைபூர்வத்தன்மையான ஆக்கமும் அந்நியமாகிவிடுகிறது. இதன் அடுத்த கட்டமாக அந்த உற்பத்திப் பொருளானது யாருக்குப் போய்ச் சேருகிறது என்பதே தெரியாமல் உற்பத்தி செய்யப்படுவதால் மற்ற மனிதர்களிடமிருந்தும் சமூகத்திடமிருந்தும் அந்நியப்பட்டுப் போகிறார். இதனால் ஏற்படும் விரக்தியும் பதற்றமும் அவர் எதிலும் திருப்தி அடையாத நிலையை ஏற்படுத் துகின்றன. உறவு களிலிருந்து அந்நிய மாகி மன உளைச்சலுக்கு ஆளாகிறார் என மார்க்ஸின் ஆய்வு செல்கிறது. இந்த உற்பத்தி முறையில் அவனு டைய அறிவும் ஆற் றல்களும் உணர்வு களும் மழுங்கடிக்கப் படுகின்றன.

**எரிக் ஃப்ராமின் ஆய்வானது முதலாளிய உற்பத்தியானது ஒருவருடைய மனநலத்துக்கு இவ்வகையில் பாதிப்பு ஏற்படுத்துகிறது என்கிறார்.** ஒருவரின் மனநலத்துக்கு ஐந்து முக்கியக் காரணிகள் அடிப்படையாக உள்ளன. முதலாவதாக அவன் மற்றவர்களுடன் உறவு கொள்ளும் தன்மை. இரண்டாவது இயற் கையைப் பயன்படுத்திக் கொண்டு தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது. மூன்றாவதாக, சமூகத்தில் ஆழமாக வேர் விட்டிருப்பதும் தனது உணர்வு களுக்கு வடிகாலாக யாரையாவது சார்ந்திருப் பதும். நான்காவதாகத் தன்னை எதனுடனா வது அடையாளப்படுத்திக் கொள்வதும். இறுதியாக, தன் பார்வையின் மூலமாக உலகைப் புரிந்துகொள்வதும் அதன் மூலமாக அனுபவங்களைத் தொகுத்துக்கொள்வதும்


மனநலத்துக்கு அடிப்படையானவை.

ஆனால், லாபத்துக்கு நடைபெறும் சரக்கு உற்பத்தி முறை இந்த ஐந்தையும் சிதைத்து விடுவதால் அதன் தவிர்க்க முடியாத விளைவாக மனநோய்கள் உருவாகின்றன.

**நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி**

இன்னொருபுறம் முதலாளிய உற்பத்தியில் நுகர்வுப் பொருட்களும் ஆடம்பரப் பொருட்களும் குவிக்கப்படுகின்றன. இவற்றை வாங்குவது சமூக அந்தஸ்துக்கு அடையாளமாகக் கருதப்படுகிறது. ஒருபுறம் அடிப்படைத் தேவைகளையே நிறைவேற்றிக்கொள்ளப் போராடும்போது இன்னொருபக்கம், நுகர்வுப் பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் வாங்க வேண்டிய நிர்பந்தங்கள் ஏற்படும் போது ஏற்படும் முரண்பாடுகள் மனதின் சமநிலையைக் குலைக்கின்றன.

மன்த்லி ரிவ்யூ என்ற சர்வதேச ஆய்வு இதழின் ஆசிரியர்களான பால் சுவிசி, பால் பாரன் ஆகியோர் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி சமூகத்தில் தொடர்ந்து திருப்தியின்மையை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கின்றனர். இந்த நுகர்வுப் பொருட்களை வாங்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்





கொள்வது என்பது அடைய முடியாத இலக்காக மாறிவிடுகிறது. இதனால் பதற்றம், மன அழுத்தம் மற்றும் கடுமையான மனநோய்களான மனச்சிதைவு, குற்றங்களைக் குற்ற உணர்வின்றிப் புரியும் ஆளுமைச் சிதைவு என மனநோய்கள் தொடர்ந்து உருவாகுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

**மன உளைச்சல்களும் திருப்தியின்மையும்**

உலகமயமாக்கல் கொள்கைகள் அமல்படுத்தப்பட்ட பின்னர் அனைவரும் போட்டி போட்டுக்கொண்டு பணம் ஈட்டுவதிலும் ஆடம்பரப் பொருட்களை வாங்கிக் குவிப்பதிலும் ஈடுபடுவது மன உளைச்சலையே அதிகரிக்கும். தன்னுடைய அந்தஸ்தை உயர்த்துவது என்ற பெயரில் எப்போதும் திருப்தி யின்றி இருப்பது அதிகரித்து வருவதைப் பார்க்க முடியும். எனவே மனநோய்களை முதலாளிய உற்பத்தி முறையே உற்பத்தி செய்கிறது என்று சொல்லலாம். எந்த சக்திகள் மனநோய்களை உற்பத்தி செய்கின்றனவோ அவற்றிடமே அதற்கான சிகிச்சையையும் ஒப்படைப்பது எந்த வகையில் தீர்வளிக்கும்?

**துணை நின்றவை:**


1. MoU Signed with BANYAN AND HANS FOUNDATION and health secretary of Tamilnadu Govt

2. Statement of psychiatrists forum for people

3. The Commodification of Indias Healthcare Services, (chapter 3)Healters or Predators by Keshav Desiraju edited by samiran Nundy

4. Age of Monopoly Capitalism by paul sweezy and paul baran , published by Monthly Review , Newyork

5. Capitalism and Mental Health by David Matthews The Guardian, October 12, 2016).

# ஆட்சியாளர்களை விரட்டி அடிக்கும் சிங்கள மக்களின் வரலாறு காணாத எழுச்சி



❑ **செந்தமிழ்க்குமரன்**
தமிழின உணர்வாளர் கூட்டமைப்பு

**2009**ல் ஈழத் தமிழினத்தை அழித்த சிங்கள ஆட்சியாளர்கள் தற்போது சொந்த மக்களிடத்திலேயே சிக்கியிருப்பதும், மீள முடியாமல் தவிப்பதும் காலத்தின் கோலம் தான்!

சிங்கள மக்களின் இத்தகைய போராட்டம் சிங்கள அரசியலதிகாரத்தில் எந்தவகையான கொள்கை மாற்றத்தை ஏற்படுத்தப்போகிறது என்பதிலிருந்தே இக்கிளர்ச்சியின் திசை வழிப்போக்கைத் தீர்மானிக்கமுடியும்

கடந்த 70 ஆண்டுகளாக சிங்கள, பௌத்தப் பேரினவாதத்தால் தமிழர்கள் அரசியல், பொருளியல் தளத்தில் பாதிக்கப்படும் போதும் தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த போதும் அதை ஆதரிக்காத சிங்கள மக்கள் தற்போது கிளர்ந்தெழுவது தங்கள் மீதான பொருளியல் தாக்குதலை எதிர்த்து மட்டுமே மாறாக சிங்கள,பௌத்தப் பேரின வாதத்தை இவர்கள் தற்போது எதிர்க்கவில்லை அதனாலேயே சிங்கள, பௌத்தப் பேரினவாதமும் தற்போது இவர்களை எதிர்க்கவில்லை, மௌளம் காக்கிறது!

ஆக! சிங்கள மக்களின் தன்னெழுச்சியான இப்போராட்டம் சிங்கள, பௌத்தப் பேரின வாதத்தை எதிர்க்கும் அரசியல் போராட்டமாக வளர்த்தெடுக்கப்பட்டால் மட்டுமே சிங்கள மக்கள் தற்போதைய பொருளியல் நெருக்கடியிலிருந்து மீளமுடியும். அப்படியான சூழல் உருவானால் ஈழத்தமிழர்களும் சிங்கள மக்களின் போராட்டத்திற்கு துணை நிற்பார்கள்! இதுவே வீழ்த்தப்பட்ட ஈழ அரசியல் உலக அரங்கில் மீள எழும்புவதற்கான சூழலை உருவாக்கும் தாய்த்தமிழகம் இப்படியான ஒரு சூழல் உருவாகும்போது துணை நிற்பது முக்கியமான அரசியல் கடமை!

ஆக! சிங்கள மக்களின் கிளர்ச்சி சிங்கள, பௌத்தப் பேரினவாத்தை எதிர்த்த அரசியல் போராட்டமாக மாற்றமடையட்டும்!



Owned & Published by Sa.Kubendhiran from No.243/1, Periyar Nagar, Kattu Naval,Kantharva Kottai Post, Pudukottai Dist. Pin:613301
and Printed by him at Sekar Offset Printers, Old No.168/1, New.No.50, Big St,Chepaukkam, Chennai-600005. 044-28544024.